VISIT…



சூப்பர் ஸ்டாரின் இதயம் திறக்கிறது!

'உனக்கு எப்பொழுது தேவையோ, அப்பொழுதுதான் நான்
வருவேன்; நீ கூப்பிடும் பொழுதெல்லாம் இல்லை!'

– மகா அவதார் பாபாஜி

கிட்டுமோ ஞான யோகம்? கிடைக்குமோ குருவின் பாதம்?
கட்டுமோ மூல வாசி? காணுமோ கயிலை வீடு?
எட்டுமோ நாக லிங்கம்? ஏற்றுமோ தீப சோதி?
தட்டுமோ பளிங்கு மேடை தனையறியார்க்கு நெஞ்சே!

–நெஞ்சறி விளக்கம்

கண்ணாடிக் கரைசல் போல, கடவுளின் விழிகள் போல ஸ்படிகத் துல்லிய நதி. குழந்தையின் இதயம் போல, துறவியின் பயணம் போல பனி மழையில் நனைந்தபடி நகர்கிறாள் கங்கை!

எங்கோ தொலைதூரச் சிகரத்தின் அடர்ந்த பனிக் குகையில் மௌனத்தின் மத்தியில் உற்பத்தியாகி, பிரதேசமெங்கும் உருகிப் பெருகி வழிந்தோடும் மகா நதியான கங்கையின் பிரணவ மந்திரப் பேரோசை தவிர, சில்லிடும் அமைதி!

மனசுக்குள்ளும் மழை பெய்ய ஆரம்பிக்கும் நேரம்... குளிர்க் காற்றுக்கு இதமாக, காசித் துண்டை உதறி நெற்றியில் இறுக்கிக் கட்டிக்கொள்கிறார் ரஜினி.

சவரம் செய்யப்படாத முகம்; கிழிசலான கதர்ச் சட்டை; இடுப்பில் காவி வேட்டி; காலில் ரப்பர் செருப்பு; கையில் ஊன்றுகோல். அந்த குளிர் கண்ணாடியும், லெதர் பேக்கும் இல்லையென்றால் ரஜினி... கூட்டத்தில் ஒரு முகம்!

என்ன இல்லை இவரிடம்?



இதோ இந்த வருடத்தின் சூப்பர் ஹிட் படம்... 'சந்திரமுகி'! தமிழ் சினிமாவின் அத்தனை ரிக்கார்டு களையும் அடித்து நொறுக்கி தூக்கித் தூரப்போட்டுவிட்டு, துள்ளலாய் ஓடுகிறது படம்.

'சூப்பர் ஸ்டார்' என்பது ஆளுக்காள் அமரத் துடிக்கிற மியூசிக்கல் சேர் அல்ல, அது ரஜினியின் அடையாளம்... அடையாளங்களில் ஒன்று!

இந்த ஜென்மத்துக்குப் போதுமான புகழ் பார்த்தாகிவிட்டது. இன்னும் ஏழு தலைமுறைக்குத் தேவையான பொருள் சேர்த்தாகிவிட்டது. இவர் பேசினால் செய்தி. பேசாவிட்டாலும் செய்தி. புதிய படத்துக்கு பூஜை போட்டாலோ கொட்டும் கரன்ஸி அருவி. நிரந்தரமாக லட்சக்கணக்கான இதயங்களிலும், நிம்மதி தேடும்போதெல்லாம் இமயத்திலும் வசிக்கிற வாழ்க்கை!

சம காலத்தில் இவர் போல் யாரும் சிகரங்களைத் தொட்டதுமில்லை. சர்ச்சைகளில் சிக்கி, இவரளவுக்கு எவரையும் விமர்சனங்கள் சுட்டதுமில்லை! 'சந்திரமுகி'யின் வெற்றிக்கு உழைத்த வர்களுக்கு, தன் நன்றியைச் சொல்ல அழைத்தார் ரஜினி. வீட்டிலேயே விருந்து படைத்தார். நள்ளிரவு தாண்டியும் நடந்தது கொண்டாட்டம். விடிந்தபோது, ரஜினி சென்னையில் இல்லை. தன் குருவின் பாதம் பணிந்து நன்றி சொல்ல பயணமாகிக்கொண்டு இருந்தார் இமயமலைக்கு!

டெல்லிக்கு விமானம். அங்கிருந்து ரிஷிகேஷ். பிறகு ராணிகேத். இடுப்பொடிக்கிற இரண்டு நாள் பயணம் காத்திருக்கிறது. ரஜினியுடன் வழித்துணையாக பாபாஜி தரிசனத் துக்குப் பயணமாகிற நண்பர் ஹரி உற்சாகமாகப் பேச ஆரம்பிக்கிறார். "ரஜினி என்ற நடிகருக்கு உங்களைப் போல நானும் ஒரு ரசிகன். ஆனால், ரஜினி என்கிற மனிதருக்கு நான் நண்பன். 'இருந்தும் இல்லாமல் இரு' என்பார்களே... அதற்கு எனக்குத் தெரிந்த ஒரே உதாரணம் ரஜினிதான்" என்கிறவர் எதையோ நினைத்துக் கொண்டு சிரிக்கிறார்.

"ரஜினிக்கும் எனக்கும் இருக்கிற நட்பு தெரிந்த சிலர், 'ஏன் சார் ரஜினி அடிக்கடி இமயமலைக்குப் போறார்? சாமியார் ஆகிடுவாரா?' என்று என்னிடம் கேட்பார்கள்.

துறவு என்பதில் பலவிதங்கள் உண்டு. மகா பெரியவரும் துறவிதான். மதர் தெரஸாவும் துறவிதான். பெரியவர் தெய்வங்களைத் தொழுதார். மக்களுக்கு ஆசிர்வாதங்களை வழங்கினார். தெரஸா தெருவோர தொழு நோயாளிகளையே தெய்வங்களாகப் பார்த்தார். அவர்களுக்குச் சேவை செய்தார். அப்படி ரஜினியிடம் என்னைக் கவர்ந்தது அவரது பற்றற்ற மனசு!" என்கிறார் ஹரி.

"ரஜினி நிறைய குட்டிக் கதைகள் சொல்வார் தெரியுமா" என்று பயணத்தை சுவாரசியப்படுத்துகிறார் ஹரி.

இதோ ரஜினி சொல்லும் கதை! "ஒரு தாய் ஒட்டகமும் அதன் குட்டி ஒட்டகமும் பேசிக்கொண்டு இருந்தன. குட்டி மனசில் நிறைய கேள்விகள். 'நமக்கு ஏன் அம்மா இத்தனை நீளமான கால்கள்?' என்றது குட்டி.

'அதுவா மகனே, பாலைவனத்தில் மிக நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டியிருக்கும். அதுவும் மணல் பூமி. அதனால்தான் நமக்கு நீண்ட கால்கள் வழங்கினார் கடவுள்' என்றாள் தாய்.

'நமக்கு ஏன் இத்தனை முரட்டு உதடுகள்? கற்கள் போல பற்கள்?'

'அதுவா மகனே, பாலைவனத்தில் கிடைப்பதெல்லாம் முள் தாவரங்கள் தானே. அவற்றை மெல்லுவதற்கு வசதி யாகக் கடவுள் செய்த ஏற்பாடு!'

'நமக்குள் ஏன் இத்தனை பெரிய தண்ணீர்ப் பை?'

'அதுவா மகனே, பாலைவனத்தில் தண்ணீர் கிடையாதே. அதனால் பயணத்தில் தாகமெடுத்தால், நா வறண்டு நாம் தடுமாறக் கூடாது என்று கருணைகொண்டு கடவுள் தந்த பரிசு இது!' என்று தாய் ஒட்டகம் பதில் சொன்னதும், 'அதெல்லாம் சரி, பிறகு ஏனம்மா நாம் இப்படி சர்க்கஸில் இருக்கிறோம்?' எனக் கேட்டதாம் குட்டி ஒட்டகம்.

இது ரஜினிக்கு மிகவும் பிடித்த தத்துவார்த்தமான குட்டிக் கதை. 'நாமெல்லாம் சர்க்கஸ் ஒட்டகங் கள்தானே!' எனச் சிரிப்பார் ரஜினி" என ஹரி சொல்லும்போதே சிரிக்கிறார்.

சாலையோர தேநீர்க் கடைக்குள் நுழைகிறார் ரஜினி.

யாரோ புது கஸ்டமர் என்பது போல எட்டிப் பார்க்கிற கடைப் பையன், "ரஜினி சாப்!" என அலறுகிறான் பரவசமாக! சத்தம் கேட்டு ஏழெட்டு குட்டிப் பையன்கள் பக்கத்து காட்டுக் குள்ளிருந்து ஓடி வருகிறார்கள். டீக்கடை மாஸ்டர் அமிதாப்பின் ரசிகராம். 'அந்தா கானூன்' பார்த்த பிறகு ரஜினிக்கும்.

மரத்தடியில் அமர்கிற ரஜினி அந்த சின்னப் பையன்களிடம் பேச ஆரம்பிக்கிறார். காட்டு ரோஜாக்கள் போல சிவந்த நிறம். பூனைக் கண்கள். குளிர் அந்தப் பையன்களுக்கு கூடுதல் வசீகரத்தை வழங்கி இருக்கிறது. 'மித்வா சுன் மித்வா...' என லகான் படப் பாடலை கீச்சிடும் குரலில் பாடிக் காட்டுகிறான் பையன். தேயிலை மணக்கும் பானம் கொஞ்சம் கதகதப்பு கூட்டுகிறது. உழைத்தால்தான் பிழைப்பு என வாழ்கிற அந்தப் பையன்கள், ரஜினிக்கு

அவரது பெங்களூர் பால்ய காலத்தை நினைவுபடுத்தி இருப்பார்கள் போல. தன்னை மறந்து ஏகாந்தமாக ரசிக்கிறவர், "நல்லா பாடுறாப்லல்ல!" என்கிறார் தன் புருவம் சொடுக்கிச் சிரித்து.

பயணம் தொடர்கிறது!

தமிழ்நாடே கொண்டாடுகிற ஒரு நடிகர், அந்த ஒளிவட்டம் எதுவும் இல்லை. பாதுகாப்புக்கு யாரும் இல்லை. படை பரிவாரங்கள், உதவியாளர்கள் இல்லவே இல்லை. தன் பையைத் தானே சுமந்தபடி, பாத யாத்திரையாகச் செல்கிறார்.

கற்பிழக்காத காற்று. இரைச்சலே இல்லாத இயற்கை. "நம்ம ஊர்ல இருக்கிற வசதிகள் என்னென்னவோ இங்கே இல்லைதான். ஆனா, இங்கே இருக்கிற அமைதி வேறெங்கேயும் இல்லை. அமைதியான சூழல், நம்ம மனசைத் திறக்கும். மனசு அமைதியா இருந்தா எண்ணம் தூய்மையாகும். எண்ணம் தூய்மையா இருந்தா, எல்லோரும் சுத்தமா இருப்போம்ல!"

இமயமலைத் தொடரின் மிக உயர்ந்த சிகரங்களில் ஒன்றான நந்தாதேவியின் (25,661 அடிகள்) அடிவாரத்தில், அல்மோரா மாவட்டத்தில் இருக்கிறது ராணிகேத். அங்கிருந்து துரோண் மலை மீது ஏற வேண்டும். புலிகள் உலவும் அந்த மலை உச்சியில், காலங்கள் தாண்டிய கம்பீரத்துடன் காத்திருக்கிறது பாபாஜியின் கற்குகை!

'பாபாஜி' என்றால் 'வணக்கத் துக்குரிய தந்தை' என்று பொருள்.

மூன்றாவது முறையாக தன்னைத் தரிசிக்க, தன் தாள் பணிந்து நன்றி சொல்ல வருகிற சிஷ்யனுக்காக, இந்த முறை சிலிர்ப்பூட்டும் அனுபவம் தரக் காத்திருக்கிறார் மகாமுனி பாபாஜி மகராஜ்!

இத்தனை காலத்தில் ஆறேழு பேர் மட்டுமே நுழைய முயற்சித்த குகை அது. குத்திக் கிழிக்கும் கூரிய கற்கள் கொண்ட அபாயகரமான குழி அது. அதற்குள் ஒரு மனிதன் உடலைத் திணித்து நகர்ந்து நகர்ந்து செல்வதென்பது, உயிரைப் பணயம் வைக்கும் தருணம்.

விடுகதைதானோ இவர் வாழ்க்கை... விடை தேடித்தானோ இந்தப்பயணம்!



ïதியின் குளிரும்... மலரும் இரவும்... ஒளிரும் நிலவும் சூழலை சுகந்தமாக்குகிறது!

ருத்ர பிரயாக்... இரண்டு நதிகள் காதலுடன் கலக்கும் பனி நீர்ச் சாலை.

ஏதேதோ ரகசியங்கள் பேசும் நதி நீரை விரலால் தொட்டாலே உயிர் உறையும் குளிர். அதன் பாய்ச்சல் இன்னும் பயமுறுத்துகிறது!

“குளிப்போமா?" என்கிறார் ரஜினி. “அடப் போப்பா! கரையில நிக்கிறப்பவே கிடுகிடுக்குது" என நண்பர் ஹரி தயங்க, “இக்கட சூடு!" என இடுப்பில் ஒரு துண்டுடன் ஜாலியாக ஆற்றில் இறங்கிய வேகத்தில் மூழ்கி எழுகிறார் ரஜினி.

“குளிரலையா தலைவரே?"- வியப்பும் திகைப்புமாய் ஹரி கேட்க, “இறங்கற வரைக்கும்தாம்ப்பா எல்லா தயக்கமும். முழுக்க நனைஞ்சிட்டா மோட்சம்!"-உற்சாகமாய் நீராடுகிற ரஜினி, கழுத்தளவு நீரில் மௌனமாய் அமர்கிறார். நிமிடங்கள் கரையக் கரைய நிசப்தமாய் தியானத்தில்!

துண்டை உதறி தலை துவட்டத் தொடங்குகிற ரஜினி ஒரு கதை சொல்கிறார்...

முதல் விஜயத்தின்போது...

“ஒருவன் கடவுளுக்குப் பரிசு தர விரும்பினான். தன்னையே படைச்ச கடவுளுக்கு தான் என்ன பரிசு தருவது?

இந்த உடல், உயிர், உலகம் எல்லாமே அவன் தந்தது. அதைப் பரிசாகத் தர்றதில் அர்த்தமில்லை. மண், பொன், மலர், பொருள்னு எல்லாமே அவனோடது. அவன் தந்ததையே அவனுக்குத் தர முடியுமா? கடவுளுக்கு ஒரு பரிசு

தர்றோம்னா, அது நிச்சயம் அபூர்வமானதா இருக்கணும். அந்தக் கடவுளிடமே இல்லாத ஒண்ணா இருக்கணும். கடவுளிடம் இல்லாத ஒண்ணுன்னா அதை எப்படிக் கண்டுபிடிக்கிறது? அது கடவுளைத் தேடுறதைக் காட்டிலும் கஷ்டமான காரியமாச்சே!

இருந்தாலும் கடவுளுக்கு அப்படி ஒரு பரிசு குடுக்கணும். என்ன குடுக்கலாம்? அது தன்னால் மட்டுமே தர முடிகிற விஷயமா இருக்கணும். இந்தப் பிரபஞ்சத்தில் அது தன்னைவிட வேறு யாராலயும் தர முடியாத ஒண்ணா இருக்கணும்னு நினைச்சான். கடவுளுக்கு இது தெரிஞ்சா 'இதப் பார்றா!'னு சிரிச்சிருப்பார். ஆனாலும் அப்படி ஒண்ணை அவன் கண்டுபிடிச்சான். அது என்ன தெரியுமா?" ஒரு கணம் நிறுத்தி, கண்களால் விசாரிக்கிறார் ரஜினி. அப்படி ஒரு பரிசு என்னவாயிருக்கும்?

ஹரி

"நானே சொல்றேன், நினைச்சு நினைச்சு தேடித் தேடி நெஞ்சுருகி நின்ன பக்தன், கடைசியில் அப்பிடி அபூர்வமான பரிசா தந்தது... எல்லாம் அறிந்த கடவுளுக்கு தன்னோட அறியாமையை!" என்று சிரிக்கிற ரஜினி, "அது அவனால் மட்டும்தானே தர முடியும். மனிதன் கடவுளுக்குத் தர முடிகிற ஒரே காணிக்கை - அறியாமை மட்டும்தான். 'நாராயணனுக்கு ஆராதனை என் அறியாமை ஒன்றே!'னு சொன்ன அந்த பக்தன் யார் தெரியுமா, நம்ம கம்பன்!"

பயணம் அன்றிரவு அங்கேயே ஒரு விடுதியில் முடிகிறது. மிகச் சாதாரண அறையை, வசந்த மாளிகை ஆக்குவது அதன் நீள அகலமான கண்ணாடி ஜன்னல். ஜன்னலுக்கு வெளியே கங்கை!

இரண்டு சப்பாத்திகளுடன் முடிகிறது இரவு உணவு. நள்ளிரவு தாண்டியும் நீள்கிறது பேச்சு. 'சந்திரமுகி'யின் வெற்றி பற்றி பேச்சு ஆரம்பிக்கிறது. "நான் சந்தோஷமா இருக்கேன். 'பாபா' படம் சரியாப் போகாதது பற்றி எனக்குப் பெரிய வருத்தம் இல்லை. பிசினஸ்னு பார்த்தால் அதுவும் சக்சஸ்தான். ஆனால், என் ரசிகர்கள் அப்போ கொஞ்சம் அப்செட் ஆகிட்டாங்க. என்னை நேசிக்கிற ஒவ்வொரு ரசிகனும் எனக்கு அம்மா மாதிரி. இதை சும்மா என் உதட்டி லிருந்து சொல்லலை. மனசிலிருந்து, என் இதயத்தி லிருந்து சொல்றேன்... ஆமா, அவங்க ஒவ்வொருத் தரும் எனக்கு அம்மா மாதிரி!" கண்ணாடி ஜன்னல் வழியே கங்கையை கண்கள் பார்க்க, ரஜினியின் இதயக் கதவுகள் டபக்கென திறக்கின்றன.

“தாய்க்கு நாம நன்றி செலுத்த முடியுமா? தாயன்புக்கு ஈடான மரியாதை செய்ய முடியுமா?

ஏன்னா... ஒரு தாய், தன் பிள்ளையை வயித்தில் சுமக்கிறதைவிட மனசில் சுமக்கிறது அதிகம். அவளுக்கு எல்லாமே அந்தப் பிள்ளைதான். அவளோட அத்தனை கவனமும் அந்தப் பிள்ளை மேலதான் இருக்கும். அவளோட தூக்கம் கெடும். பிள்ளை ரொம்பத் தொந்தரவா இருக்கும். ஆனாலும் அந்தப் பிள்ளையையே தன் உயிரா நினைச்சு வாழ்வாள். அப்படிப் படாதபாடுபடுத்துற அந்தக் குழந்தை சடக்குனு அபூர்வமா தன் அம்மாவைப் பார்த்துச் சிரிக்கும். அந்தச் சின்னப் புன்னகை, அம்மாவோட எல்லாக் கவலைகளையும் துடைச்சுப் போட்டுடும்.

அப்படி என் ரசிகனுக்கு இதுவரைக்கும் என்னால் தர முடிஞ்சது ‘பாட்ஷா', ‘படையப்பா', ‘சந்திரமுகி'னு சின்னச் சின்ன சந்தோஷங்கள் தான். ஆனா, அது மட்டுமே போதுமானு எனக்கு யோசனையா இருக்கு. ஒவ்வொரு தானியத்தின் மீதும் ஒவ்வொருத்தர் பெயர் எழுதப்பட்டிருக்கும்னு சொல்வாங்க. என் தானியங்கள் மீது என் பெயரை எழுதின ஒவ்வொரு ரசிகனும் எனக்கு கடவுளுக்கும் மேலே!"

ரஜினியிடம் ஒரு பழக்கம். அவர் பெரும்பாலும் அமர்வதில்லை. விடுவிடுவென வேகமாய் குறுக்கும்நெடுக்குமாய் நடந்தபடியே இருக்கிறார். கோடிக்கோடி இதயங்களை வசீகரிக்கிற நடை!

“இந்த ஸ்டைல் ஸ்டைல்னு சொல்றாங்களே, அது நானா பண்றதில்லை. தானா வந்தது! முன்னெல்லாம் பரபரனு என் மனசு அலைபாயும். ஒரு இடத்தில் இருந்தாலும் மனசு ஊரெல்லாம் ஊர்வலம் போகும். இப்போ உலகமெல்லாம் சுத்தினாலும், என் மனசை ஒரே இடத்தில் குவிக்க முடியுது. இது எனக்கு வாய்ச்சது, ஒன்று இறை நம்பிக்கையால். இன்னொண்ணு யோகாவும் தியானமும் கொடுத்த பரிசு!"

ஏதோ யோசனையில் அமர்ந்திருக்கிற ரஜினியிடம், “இப்படி ஒரு சூப்பர் ஸ்டாரா வருவோம்னு எப்பவாவது நினைச்சிருக்கீங்களா?" என்று கேட்கிறார் ஹரி. “என்ன கேட்டீங்க, என்ன கேட்டீங்க?" எனத் திரும்புகிற ரஜினி, “எப்பவோ என்னிடம் எழுத்தாளர் சுஜாதா இதே கேள்வியைக் கேட்டார்... ‘ரஜினி, நீங்க ரொம்ப பெரிசா ஜெயிச்சிருக்கீங்க, இப்போ திரும்பிப் பார்க்கும்போது உங்களுக்கு என்ன தோணுது? உங்க வெற்றிக்கு என்ன காரணம்? ஆண்டவன் அருளா, திறமையா, அதிர்ஷ்டமா, இல்லே உழைப்பா?'னு கேட்டார்.

‘சத்தியமா ஆண்டவன் அனுக்கிரகம்தான்! அவன் கருணை இல்லாமல் நான் வளர்ந்திருக்க முடியாது. ஆனா, எங்கேயோ பெங்களூரில் ஒரு பஸ் கண்டக்டரா இருந்த சிவாஜிராவ், இங்கே மெட்ராஸில் ஒவ்வொரு ஸ்டுடியோவா ஏறி வாசல் கதவைத் தட்டினான் பாருங்க, அது அவனோட முயற்சி!

அப்படிக் கிடைச்ச வாய்ப்பை நிரூபிக்கணும்னு முடிஞ்சதெல்லாம் செஞ்சு போராடினான்

பாருங்க, அது அவனோட உழைப்பு. நாம நிச்சயம் ஒரு நாள் ஜெயிப்போம்னு கனவு கண்டானே... அது அவனோட நம்பிக்கை. அதோட, ஜனங்களைத் தன்னாலயும் என்டர்டெயின் பண்ண முடியும்னு கெடந்து பல்டி அடிச்சான் பாருங்க, அது அவனோட திறமை. அதுக்கு இந்த மக்களோட அன்பு கிடைச்சதே, அது அவன் செஞ்ச பாக்யம்!'னு சொன்னேன். அதானே உண்மை!

கண்ணா, ஒரு விதை வளர்ந்து செடியாக நல்ல மண்ணு, தண்ணி, காத்து, வெளிச்சம் இப்பிடி என்னென்னவோ வேணும். எல்லாமே கிடைச்சாலும்கூட, முக்கியமா அந்த விதைக்குள்ள இருக்குமே ஒரு உயிர்... அந்த உயிருக்கு தன்னால் முட்டி மோதி முளைக்க முடியும்கிற நம்பிக்கை வேணும். நம்பிக்கை தானேப்பா எல்லாம்!"

அபாயகரமான சரிவுகளும், வழுக்குப் பாறைகளும் நிறைந்த கரடுமுரடான பாதை. வழி காட்ட ஒரு மலைவாசியும், காட்டு நாயும் முன் செல்ல, துரோணகிரி மலை மீது துவங்குகிறது பயணம்!

கிடுகிடுவென மின்னல் வேகத்தில் தொட்டுவிட முடியாத தூரத்துக்கு சரசரவென முன்னேறுகிற ரஜினி, "வாங்கப்பா!" என ஹரியையும் வெங்கட்டையும் வேகப்படுத்துகிறார். "நாங்க வழி காட்ட வந்தோமா? இல்லே, நீங்க எங்களுக்கு வழி காட்டுறீங்களானு புரியலையே தலைவரே!"- மலைப் பாதையில் பிடிமானத்துக்காகப் பயன்படுத்துகிற ஊன்றுகோலை ஊன்றியபடி ஹரி கேட்க, அதே ஸ்டிக்கைச் சுழற்றியபடி, உற்சாகமாகச் சிரிக்கிறார் ரஜினி.

ரஜினி கிரியா யோகாவுக்கான தீட்சை வாங்கியது பாபாஜியின் குகையில்!

அந்த முதல் விஜயத்தின்போது, தன் மனைவி லதாவையும் அழைத்து வந்தார். அது இன்னும் கடுமையான பயணம். ஆனால், ரஜினியும் லதாவும் ஒரு பரவச தரிசனத்துக்குத் தயாராக வந்திருந்ததால், எந்த சிரமத்தையும் பொருட்படுத்தவில்லை. பாபாஜியின் குகையில் இருந்த ஒவ்வொரு கணமும் ரஜினி, லதா இருவரிடமும் அப்படி ஒரு உற்சாகம். வெளியே வந்த ரஜினி சொன்னார்... "நான் புதிதாகப் பிறந்திருக்கிறேன். இந்த சந்தோஷம் நான் இதுவரை அறியாதது!"

இதோ இம்முறை பாபாஜியின் குகையில் நுழைகிறோம். அது இயற்கை அமைத்துத் தந்த கற்குகை. பாபாஜியும் அவரது சீடர்களும் வாசம் செய்யும் தலம். உள்ளே பிரவேசித்ததுமே அந்த அதிர்வை உணர முடிகிறது. மௌனமாய் குகையில் தியானத்தில் அமர்கிறார் ரஜினி. பக்கத்திலேயே ஹரியும் வெங்கட்டும்!

திடுமென ஏதோ ஒரு தகவல் கிடைத்த உள்ளுணர்வில் "வாப்பா வா!" என ரஜினியை அழைத்தபடி, பதற்றமும் பரவசமுமாக மலை மீது ஓடுகிறார் ஹரி!

மேலே சில தப்படிகள் கடந்து, ஒரு புதரோரம் ஒளிந்துகிடக்கிற ஒரு பாறைப் பிளவைக் காட்டுகிறார். "இதுதான் பாபாஜியின் அருள் குகை. இதுக்குள்ள இறங்கறது உயிரைப் பணயம் வைக்கிற வேலை!" என ஹரி சொல்லச் சொல்ல... ரஜினியின் விழிகளில் டிகிரி டிகிரியாக ஒளிர்கிறது பிரகாசம்!

"இப்போதான் நமக்கு பாபாஜியின் அருள் கிடைச்சிருக்கு. தோ பாருங்க தலைவரே, நாம பெரிய குகை பார்த்துட்டோம். இப்பவே இப்படியே சந்தோஷமா திரும்பிடலாம்.

உங்களுக்கு ரெண்டு சாய்ஸ் இருக்கு, நீங்க பெரிய சூப்பர் ஸ்டார். சந்தோஷமான லைஃப் ஸ்டைல். அப்படியே ஜாலியா இருக்கலாம். ஏன்னா, இந்தக் குகைக்குள் இறங்கணும்னா அது ரொம்ப ரிஸ்க்கான விஷயம். பகவானோட ஆசிர்வாதம் வேணும்.



இது கிட்டத்தட்ட டபிள்யூ ஷேப்பில் இருக்கிற குகை. ஒரு மனுஷன் ஊர்ந்து ஊர்ந்து உள்ளே போகணும். கூர் கூரான கல்லு குத்திக் கிழிக்கும். உள்ளே என்ன இருக்கும்னு யாருக்கும் தெரியாது. மனுஷ நடமாட்டமே இல்லாத வனாந்தரம் இது. இங்கே என்ன வேணா நடக்கலாம்!

இந்த ரிஸ்க் எடுக்கணுமா சொல்லுங்க... இப்பவும் உங்களுக்கு ரெண்டு சாய்ஸ் இருக்கு!" ஹரி சொல்வதைக் கவனமாகக் கேட்கிற ரஜினி, கட்டை விரலால் தன் நெற்றியில் கோடு கிழித்துச் சிரித்தபடி, "நான் ரெடி!" என்கிறார்.

முதலில் வெங்கட் இறங்குகிறார். கூரிய கற்களுக்கு நடுவே குனிந்து வளைந்து நெளிந்து அவர் உள்ளே நகர்ந்து நகர்ந்து செல்வதைப் பார்க்கிற ரஜினியும் இப்போது தயார்!

"பாபா!" என வானம் நோக்கி வணங்குபவர், பூமிக்குள் இறங்குகிறார். "கவனமா கவனமா!" மேலே நிற்கிற ஹரி சொல்லச் சொல்ல, ரஜினி மிகுந்த சிரமத்துடன் உள்ளே இறங்கி இறங்கி காணாமல் போகிறார்... தன்னைக் கண்டெடுக்க!

èருவறையின் இருளைக் கிழிக்கிறது ஒரு மெழுகுவத்திச் சுடர்!

தாயின் தொப்புள்கொடிக்குள் நுழைகிற உணர்வு! தகதகக்கிற தங்க ஜ்வாலை வழிகாட்ட, உள்ளே... மிக உள்ளே... மெள்ள மெள்ள நகர்கிறார் ரஜினி!

தாறுமாறாக நொறுங்கிய கண்ணாடிச் சில்லுகள் போலத் துருத்தி நிற்கும் கூர் கற்கள்... தலைகீழாய் தவழ்ந்து தவழ்ந்து, சடாரென வளைந்து நிமிரும் வழியே சிரமப்பட்டு உடல் திணித்து, அவர் முன்னேறுகிற காட்சியை யார் பார்த்தாலும், மனதுக்குள் ஒரு கேள்வி முளைக்கும்!

'ஒரு பாவமான ஜீவன் போல, இமயமலையில் இந்த இருள் குகைக்குள் இவர் இப்படிக் கிடக்கவேண்டிய அவசியம் என்ன?'



"Þது... இந்த அனுபவம் உங்க ஆத்மசுத்திக்கு பாபா தர்ற பரிசு. எல்லா அடையாளத்தையும் தொலைச்சிட்டு, ஒரு சாதாரண மனுஷனா சரணாகதி அடையறதுக்குக் கிடைக்கப்போற பரிசு!" பின்னாலேயே தொடர்கிற ஹரி சொல்லச் சொல்ல, மின்னும் விழிகளுடன் தன் குருவின் மடி தேடி மௌனமாய் நகர்கிறார் ரஜினி.

ñலைப் பயணத்தின் வழியில் ரஜினியே அதை உணர்ந்திருந்தார். "ரெண்டு சட்டை, ரெண்டு வேஷ்டி யோட நான் வீட்டை விட்டுக் கிளம்பும்போதே, மனசளவில் எல்லாத்தையும் உதறிட்டேன் ஹரி. ஏன்னா... நான் என் வாழ்க்கையில் எதையுமே திட்டமிட்டது இல்லை!

பொத்திவெச்ச உள்ளங்கை மாதிரி இருக்கு வாழ்க்கை. 'கண்டக்டர் டு சூப்பர் ஸ்டார்'னு என் கிராஃபை ஒரு கதையாச் சொன்னா யாராவது நம்புவாங்களா? நான் பஸ் கண்டக்டரா இருந்தேன். ரொம்பச் சின்ன வேலை. சின்ன சம்பளம். ஆனால் அப்பவும்நான் சந்தோஷமா இருந்தேன். பெங்களூரிலேயே ஸ்டைலான கண்டக்டர் நான்தான். என் விசிலுக்கே அவ்வளவு ரசிகர்கள் இருப்பாங்க. நான் வர்ற பஸ்ஸுக்காக ரெண்டு பஸ்ஸை மிஸ் பண்ணிட்டுக் காத்திருந்த பாசஞ்சர்ஸ்லாம் உண்டு. இப்போ நினைச்சுப் பார்த்தா, என்னையறியாம அப்பவும் நான் ஒரு என்டர்டெயினராத்தான் இருந்திருக்கேன்!

வாழ்க்கை என்னை ரோட்ல திரியவெச்சாலும் மனசுக்குள் மகாராஜாவா இருந்தேன். எதுக்கும் எப்பவும் பெரிசா ஆசைப்பட்டதில்லை. 'கிடைச்சா சந்தோஷம்... கிடைக்கலேன்னா ரொம்ப சந்தோஷம்!'கிறதுதான் நம்ம ஸ்டைல்!

அதே மாதிரி இறைபக்தி! அம்மா முதல்ல அப்பாவைக் காட்டினாங்க. அதுக்கப்புறம் ஆண்டவனைத்தான் காட்டினாங்க. நான் கடவுளை என்னிக்குமே மறந்ததில்லை. கடவுள் என்னிக்குமே என்னையும் கைவிட்டதில்லை. என்னோட பிரச்னை என்னன்னா... குடும்பம், தொழில்னு எல்லாம் அமைஞ்ச எனக்கு, 'மாதா, பிதா, குரு, தெய்வம்'னு சொல்வாங்களே, அதில் குரு மட்டும் அமையலை. நல்ல நல்ல வாத்தியார்கள் கிடைச்சாங்க, ஆனா குரு?" கண்கள் காற்றில் அலைபாய, நடையைத் தொடர்கிறார்.

Þங்கே உள்ளே... பைக்குள் தேடித்தேடி எடுத்த ஒரு டார்ச் உயிர் பெறுகிறது. இருள் குகையில் இத்தனை இத்தனை சிரமத்துக்கிடையில் இன்னதென்று தெரியாத ஒன்றைத் தேடி, இடைப்பட்ட வழியில் சிறையாகிக் கிடக்கிறார் ரஜினி.

‘Ô°ரு ஏன் முக்கியம் தெரியுமா?” சில விநாடிகளுக்குப் பிறகு வழியில் மலையேறும்போது சிரித்த ரஜினி, ஒரு குட்டிக் கதை சொல்ல ஆரம்பித்தார். “ஒரு பெரிய குரு இருந்தார். முற்றும் துறந்தவர். எல்லாம் கற்றவர். அவரை ஒரு பிரசங்கம் செய்யக் கூப்பிட்டிருந்தாங்க. பத்தாயிரம் பேர் வருவாங்கனு சொல்லியிருந்தாங்க. அவரை அழைச்சிட்டு வர ஒரு குதிரைக் காரன் போயிருந்தான். அன்னிக்குன்னு பார்த்து ஊரில் பயங்கர மழை. கூட்டம் கேன்சலாகி எல்லோரும் கலைஞ்சு போயிட்டாங்க. குரு வந்தபோது அங்கே யாருமே இல்லை. பேசறதுக்காக நிறையத் தயார் பண்ணிட்டு வந்த குருவுக்கோ ஏமாற்றம். இருக்கிற ஒரு குதிரைக்காரனுக்காக மட்டும் பிரசங்கம் பண்ணவும் மனசில்லை.



‘என்னப்பா பண்ண லாம்?’னு கேட்டார்.

‘அய்யா! நான் குதிரைக் காரன்... எனக்கு ஒண்ணும் தெரியாதுங்க. ஆனா ஒண்ணே ஒண்ணு தெரியுங்க... நான் முப்பது குதிரை வளர்க்கிறேன். புல்லு வைக்கப் போறப்போ எல்லாக் குதிரையும் வெளியே போயி, அங்கே ஒரே ஒரு குதிரை மட்டும்தான் இருக்குதுனு வெச்சுக்கோங்க. நான் அந்த ஒரு குதிரைக்குத் தேவையான புல்லை வெச்சிட்டுத்தாங்க திரும்புவேன்’னான்.

பொளேர்னு அறைஞ்ச மாதிரி இருந்தது குருவுக்கு. அந்தக் குதிரைக்காரனுக்கு ஒரு 'சபாஷ்' போட்டுட்டு, அவனுக்கு மட்டும் தன் பிரசங்கத்தை ஆரம்பிச்சார். தத்துவம், மந்திரம், பாவம், புண்ணியம், சொர்க்கம், நரகம்னு சரமாரியா போட்டுத் தாக்கி பிரமாதப் படுத்திட்டார் குரு. பிரசங்கம் முடிஞ்சுது. 'எப்படிப்பா இருந்தது என் பேச்சு?'னு அவனைப் பார்த்து பெருமையா கேட்டார் குரு.

'அய்யா... நான் குதிரைக்காரன். எனக்கு ஒண்ணும் தெரியாதுங்க. ஆனா ஒண்ணே ஒண்ணு தெரியுங்க... நான் புல்லு வைக்கப் போற இடத்தில் ஒரு குதிரைதான் இருந்துச்சுன்னா, நான் அதுக்கு மட்டும்தான் புல்லு வெப்பேன். முப்பது குதிரைக்கான புல்லையும் அந்த ஒரு குதிரைக்கே கொட்டிட்டு வர மாட்டேன்!'னான். அவ்ளோதான்... குரு தெறிச்சிட்டார்!' - எல்லோரையும் சிரிக்கவைத்து ரசித்த ரஜினி,

"அதானே... நமக்கு என்ன புரியுமோ, அதைச் சொல்லணும். எது புரியணுமோ அதை மட்டும்தான் சொல்லணும். இங்கே நிறைய குருக்கள் சும்மா மிரட்டுவாங்க, வித்தை காட்டுவாங்க. வித்தைகளை வேடிக்கை பார்க்கலாம்... பொழுது போகும். ஆனா, நமக்குத் தேவை வழிகாட்ட ஒரு ஆத்மா. அப்படி எனக்குக் கிடைச்சவர் பாபாஜி!" என்று நெகிழ்ந்து நின்றார்.

Þப்போது மீண்டும் குகைக்குள் செல்வோம். அவஸ்தைகளுடன் நழுவி நழுவி உள்ளே வந்ததும் திகைக்கிறார் ரஜினி. இத்தனை சிறிய பொந்தைக் கடந்து வந்தால், இருபது பேர் அமர்கிற அளவு இடமா? அதுவும் பூமிக்கடியில், இத்தனை ஆழத்தில் இப்படி ஒரு குளிர்ச்சியா? வாய் திறந்தால், சுவாசித்தால் பனிக் காற்று. சுவாசம் திணறவில்லை. உடலில் துளி வியர்வை இல்லை. மனதில் துளி பயம் இல்லை. தாயின் கர்ப்பத்துக்குள் வந்துவிட்ட சிசு போல பாதுகாப்பாக உணர்கிறார் ரஜினி.

Óஜினியின் வாழ்வில் பாபா வந்த கதை தெரியுமா? 'படையப்பா' படம் முடித்து, அடுத்த படம் என்ன செய்வது என யோசனையில் இருந்த நேரத்தில், ரஜினியின் கைக்குத் தற்செயலாகக் கிடைத்தது பாபாவின் படம். அதைப் பார்த்த கணத்தில், ஒரு மின்னல் வெட்டு போல ஏதோ ஒரு ஆனந்த அதிர்ச்சி தாக்க, மயங்கி விழுந்தாராம் ரஜினி. இமயமலையின் அடிவாரங்களில் ரிஷிகேஷ், தயானந்த சரஸ்வதி ஆசிரமம் என அடிக்கடி போய் வந்த அனுபவம் இருந்தாலும், பாபா அப்போது ரஜினிக்குப் புதுசு!

பாபாவைப் பற்றிய தகவல்களை விசாரிக்க ஆரம்பித்தால், கிடைத்த செய்திகள் ரஜினியை பிரமிப்பில் தள்ளின. பாபாவின் பெயர் என்ன? தெரியாது. பாபாவின் வயதென்ன? தெரியாது. பாபாவின் புகைப்படம் என்ற ஒன்றே கிடையாது. இருப்பது எல்லாம் ஒரே ஒரு ஓவியம் மட்டுமே!

ஆயிரமாயிரம் வருடங்களாகக் காட்சி தருகிறார் பாபாஜி... ஒளியாக, குரலாக, உருவமாக! வடக்கு இமயமலையின் செங்குத்தான சிகரப் பாறைகளில் பாபாஜி இன்னும் வாழ்கிறார் என்று நம்பிக்கை. மனிதனின் குறுகிய பார்வை எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட நட்சத்திரம் அவர். அந்த அவதாரம் அடைந்துள்ள நிலையை ஊகிக்க முயல்வதுகூட வீண்தான். அது கற்பனைக்கும் அப்பாற்பட்டது!

சிரஞ்சீவித்தன்மை பெற்ற இந்த குரு இருபத்தைந்து வயது இளைஞர் போல ஓவியத்தில் தோற்றமளிக்கிறார். எழிலும் வலுவும் கொண்ட தேகம். கருமையும் சாந்தமும், கருணையும் மிதக்கும் விழிகள். தாமிர நிறக் கேசம். பாபாஜி தான் விரும்பும்போது மட்டுமே, மற்றவர்கள் அவரைக் காண்பதோ அடையாளம் காண்பதோ சாத்தியம். ராமர், கிருஷ்ணர், புத்தர், பதஞ்சலி போல பாபாஜி ஒரு மகா அவதாரம்!

ஆதிசங்கரருக்கு யோக தீட்சை அளித்தவர் பாபா. ஏசு கிறிஸ்துவுடன் என்றும் தொடர்புள்ளவர் பாபா. கிரியா யோகத்தைப் பரப்புவதே அவரது சித்தம் என அவர் பற்றிய ஒவ்வொரு செய்தியும், தகவலும், கதையும் நம் உணர்வை உலுக்கும் அதிசயம்!

Þங்கே குகைக்குள் தியானத்தில் அமர்கிறார் ரஜினி. எத்தனை பேருக்குக் கிட்டும் இந்த பாக்கியம்? தாயின் கருவறையில் மீண்டும் குடியிருக்கும் பாக்கியம்!

யாரும் தரிசிக்கிற முடிகிற பாபாஜியின் பெரிய குகைக்கும் இந்தச் சின்னக் குகைக்கும் அந்தக் காலத்தில் ஒரு வழி இருந்ததாம். பெரிய குகை ஒரு கோயில் என்றால், இந்தச் சின்னக் குகைதான் அதன் கர்ப்பக்கிரகம்! பிறகு அந்த வழி அடைக்கப்பட்டுவிட, இரண்டுக்கும் இப்போது தொடர்பில்லை.

இதுதான் மகா அவதார் பாபாஜியின் அருள் குகை. நுரையீரல் நிறைக்கிற காற்று ஒரு புது சக்தி தருகிறது. தியானத்தில் திளைக்கிறார் ரஜினி. நிமிடங்கள் நழுவ நழுவ, ஓசையற்ற... உணர்வற்ற... பிரக்ஞையற்ற மௌனத்தில் கரைகிறார். வார்த்தைகளற்ற உலகமாக இருக்கிறது!

89'ல் எடுக்கப்பட்ட அபூர்வ புகைப்படம். பின்னால் ஒளியாக பாபாஜி!

ஒழியில் ஒரு சாலையோரக் கடையில் சாப்பிட அமர்ந்தபோது, பேச்சு பொழுதுபோக்கு பற்றித் திரும்பியது. "மூணு வருஷத்துக்கு ஒரு படம் பண்றீங்க, மத்தபடி உங்களுக்கு என்ன பொழுதுபோக்கு தலைவரே?" என்று கேட்டார் ஹரி.

"டிராவல்தான்! மனசு சொல்ற பாதையிலெல்லாம் போயிட்டே இருப்பேன். இல்லே, வீட்டிலேயே மாசக் கணக்கில்கூட அமைதியா இருப்பேன். தினம் ஒரு மணி நேரம் யோகா. அப்புறம் மெடிடேஷன்!

முக்கியமா புஸ்தகம் வாசிப்பேன். கீதா... பகவத் கீதா ரொம்பப் பிடிக்கும். எப்போ படிச்சாலும் புதுசு புதுசா விஷயம் சொல்ற புஸ்தகம். அப்புறம் ஹிஸ்டரி! எனக்கு மனிதர் களின் வரலாறு பிடிக்கும். ஏன்னா... ஒரு தேசத்தோட வரலாறு எவ்வளவு முக்கியமோ, அதே அளவு ஒரு தனி மனுஷனோட வரலாறும் முக்கியம். நீ சாதாரண மனுஷனா இருந்தா உனக்குச் சரித்திரம் இல்லை. ஆனா, நீயே மகாத்மா காந்தியா இருந்தா... உன் வரலாறும் உன் தேசத்தின் வரலாறும் வேற வேற இல்லேனு சொல்வாங்க... கரெக்ட்!

லீ க்வான் யூன்னு ஒரு மனுஷன் நினைச்சார்... சும்மா மீன் பிடிக்கிற ஒரு குட்டித் தீவான சிங்கப்பூரை, உலகத்தின் நம்பர் 1 சூப்பர் மார்க்கெட்டா மாத்திக் காட்டினார். எங்கேயோ தென் ஆப்பிரிக்காவில் டிரெயினில் இருந்து காந்தியை ஒரு வெள்ளைக்காரன் பிடிச்சு வெளியே தள்ளினான். தன்னை மதிக்காத வெள்ளையனுக்கு தன் தேசத்தையே மதிக்கக் கத்துக் கொடுத்தார்.

மண்டேலா, நம்ம மாதிரி ஒரு மனுஷன்... கறுப்புத் தோலு. ப்ளாக் வொயிட்னு நடந்த நிற வேற்றுமைக் கொடுமையை முடிவுக்குக் கொண்டு வந்த தலைவன். அவரை ஜெயில்ல தூக்கிப் போட்டாங்க... இருபத்தஞ்சு

வருஷம். ஒரு இருட்டு ரூம்ல உக்காந்துக்கிட்டு ஒரு தேசத்தையே மாத்தின மனுஷன். அதுதானே தவம்... அப்போ அவர்தானே ரிஷி!

‘செல்லாத காசுக்குள்ளேயும் செப்பு இருக்கும்’னு சொல்வாங்க. சும்மா ஆளைப் பார்த்து எடை போடக் கூடாது கண்ணா! அது கறுப்புத் தோலாவும் இருக்கலாம். கண்டக்டராவும் இருக்கலாம். கஷ்டம்தான், அடிதான், அவமானம்தான் ஒரு மனுஷனை உருவாக்கும். நாளை நடப்பதை யாரறிவார்!” சிறு புன்னகை வழிய புதிராகப் பேசினார் ரஜினி!

åரு மணி நேரம் பரவசம் பொங்க ஒரு பாறை போல துளி சலனம் சஞ்சலம் இல்லாது அமர்ந்திருந்த ரஜினி கண் விழிக்கிறபோது, ஒரு குழந்தை போல இருக்கிறார். மனசு உற்சாகத்தில் துள்ளுகிறது. ஷார்ப்பான சின்னக் கண்களில் கோடிக் கோடி நட்சத்திரங்கள் கும்மியடிக்கின்றன!

குகைக்கு வெளியே புது மனிதனாக வெளியே வருகிறார் ரஜினி. கற்கள் தாறுமாறாகக் கீற, கிழிசல் சட்டை யுடன் மேலே வருகிற ரஜினி, அப்படியே அங்கேயே மண்ணில் சரிகிறார். மனசு மௌனத்தில் சஞ்சரிக்கிறது.

பாபாஜி

“எப்படி ஃபீல் பண்றீங்க தலைவரே?” – ஆர்வமாக ஹரி கேட்கிறார்.

“ நான் வேற உலகத்தில் இருந்தேன் ஹரி. என்னோட அம்பத்தஞ்சு வருஷ வாழ்க்கை, முப்பது வருஷ சினிமாவில் நான் பார்க்காத சந்தோஷத்தை பாபாஜி குடுத்துட்டார். என் மனசு நிறைஞ்சுபோச்சு. நான் மறுபிறவி எடுத்துட்டேன். பாபாஜியின் ஆசிர்வாதம் எனக்குக் கிடைச்சிருச்சு ஹரி. அது எனக்கும் பாபாவுக்கும் இடையில் நடந்த விஷயம். அதை நான் வெளியே சொல்ல மாட்டேன். எனக்குள்ள புது சக்தி, புது ரத்தம் ஊறின மாதிரி இருக்கு ஹரி. இதுதான் இதைத்தான் நான் தேடி அலைஞ்சேன். தாங்க் யூ பாபா!” கண்கள் கசிய ரஜினி சரிய, மிக அருகே ஒரு உறுமல் கேட்டது. அது ஒரு புலியின் உறுமல்!

அந்தப் பக்கமிருந்த மலைவாசி அலறினான்... “சாப், டைகர் சாப்!”

கூடவே, பயத்தில் ஒரு நாய் கதறலாய்க் குரைக்கும் ஓசை!

Fகிலும் திகைப்புமாய் கலவர முகம். பயம் உறைந்த கண்களுடன் வார்த்தை வராமல் தடுமாறுகிறார் மலைவாசி. பக்கத்தில் நிற்கிற நாய்க்கும் நடுக்கம் குறையவில்லை.

"சாப் டைகர் சாப்! புலி வந்துருச்சு..." பதற்றத்தோடு விவரிக்கிறார்... "நீங்க குகைக்குள் போயிட்டீங்க. நான் இங்கே தனியா நாயோட உட்கார்ந்திருந்தேனா... மலையேறி வந்த அசதியில கொஞ்சம் கண் அசந்துட்டேன். திடீர்னு நாய் குரைக்க ஆரம்பிச்சதும், கண்ணு முழிச்சுப் பார்த்தா டைகர் சாப். தூரத்தில் நின்னு பார்க்குது. அந்தப் பக்கம் நீங்க குகைக்குள்ள இருக்கீங்க. இந்தப் பக்கம் புலி வருது. என்ன நடக்குமோனு ரொம்பப் பயந்துட்டேன் சாப்!

பெரிய புலி. சும்மா மொரட்டு உடம்பு... அசைஞ்சு அசைஞ்சு வருது... வயித்தைக் கலக்கிருச்சு சாப்!" – கடகடவெனக் கொட்டிய மலைவாசியின் தோளை இழுத்து அணைக்கிறார் ரஜினி.



"கொஞ்சம் சாந்தமா இருங்க... நாம இருக்கிற இடத்துக்கு அவங்க வரலை. அவங்க இடத்துக்குத்தான் நாம வந்திருக்கோம். அதான், 'இது யார்டா புதுசா மனுஷங்க வந்திருக்காங்க?'னு பார்க்க வந்திருப்பாங்க!" - என்று அவர் தோளில் கை போட்டுச் சிரிக்கிறார் ரஜினி.

"அஞ்சு நிமிஷம், அப்பிடியே நின்னுருந்துச்சு.. அப்புறம் மெள்ள இந்த பொதர்ப் பக்கம்தான் இறங்குச்சு!" என்று கை காட்டுகிற மலைவாசியிடம், "கூல் கூல்! நாம அவங்க கெஸ்ட்டுப்பா!" என்கிறார் குறும்பாக!

புலிகள் உலவும் கானகத்தில், குளிர் மலைச் சிகரச் சரிவில், ரஜினி நிற்கிறார். நெஞ்சு நிறைய ஆழமாக சுவாசிக்கிறார். தன் கைக் காப்பைச் சரி செய்தபடி, ஏகாந்தமான மனநிலையில் கொஞ்சம் காலாற நடக்கிறார்.

வழக்கமான அந்த செம்புக் காப்பு தவிர, இப்போது ரஜினியின் கையில் புதுசாக ஓர் அழகுக் காப்பு மின்னுகிறது. கொஞ்சம் தங்கம், கொஞ்சம் வெள்ளி, கொஞ்சம் செம்பு என மூன்று கம்பிகள் கொண்ட முறுக்கு இது. கிரியா யோகா பெற்றதற்கான தீட்சையின் போது, ரஜினிக்கு அணிவிக்கப்பட்ட காப்பு இது. தைவானில் தயாராகி, அமெரிக்காவில் தயா மாதாவிடம் ஆசிர்வாதம் பெற்று, ரஜினியின் கையில் வந்து அமர்ந்த வளையம் இது!

திரும்பும் வழியில், ஒரு மரத்தடியில் சில நிமிடங்கள் இளைப்பாறுகிற நேரம்... “நிறைய படங்கள் செய்துட்டீங்க. பெருசா பேர் வாங்கியாச்சு. இதோ ‘சந்திரமுகி’யோட சக்சஸ் ஒரு புது ஹிஸ்டரி. இனி யாருக்கு நீங்க என்ன ப்ரூவ் பண்ணணும்? உங்க மனசில் என்ன இருக்கு தலைவரே?”

“யாரோ... எப்பவோ நட்ட மரம் நமக்கு நிழல் தருது. என்னிக்கோ யாரோ வெட்டின கிணறு நமக்குத் தண்ணீர் தருது. இதோ நாம நடக்கிற இந்தப் பாதையும் அப்படித்தானே!

எல்லாரும் ஏதாவது செய்யணும். ஒரு தலைவன் நினைச்சா அதை தேசத்துக்கே செய்யலாம்... அசோகர் மரம் நட்ட மாதிரி. ஒரு சாதாரண மனுஷன் நினைச்சால், சக மனுஷனுக்காவது அதைச் செய்ய முடியும்... அது பற்றித்தான் யோசிக்கிறேன்!” – பதில் எதிர்பாராமல், சொல்லி நடக்கிறார் ரஜினி.

“உங்களுக்கு எவ்வளவோ ரசிகர்கள் இருக்காங்க...” என ஹரி சொல்லும்போதே, “யெஸ், ட்ரூ!” திரும்பிப் பார்க்கிற ரஜினி நடை வேகத்தைக் குறைக்காமல் பேசுகிறார்... “நிறைய... நிறைய இருக்காங்க. கடவுள் தந்த பரிசு. எனக்கு இந்த ரசிகர்கள், சிஷ்யர்கள் நிறைய இருக்கலாம். ஆனால், ஒரு சிஷ்யன் எப்படி இருக்கணும்னு எனக்குக் கத்துக் கொடுத்தது பாபாதான்!

பாபாவுக்கு ஒரு சின்னக் குழு உண்டு. அவர் ஒருவரை சிஷ்யரா ஏத்துக்கறது அபூர்வத்திலும் அபூர்வமான காரியமாம். அதுக்கு பல சத்திய சோதனைகள் உண்டு. ஒரு முறை, திடீர்னு ஒரு ஆள் பாபா இருந்த இடத்துக்கு எப்படியோ வந்துட்டார். பாபாவைப் பார்த்ததும் பரவசமாகி, ‘அய்யா, நான் உங்களைத்தான் தேடிட்டே இருக்கேன், இந்த மலைப் பாறைகளுக்கு நடுவே நீங்க எங்கே இருப்பீங்கனு மாசக்கணக்கில் தேடித் திரிஞ்சேன். என்னை உங்க சிஷ்யனா எப்படியாவது ஏத்துக்கணும் சாமி, நான் கெஞ்சறேன், உங்க காலில் விழறேன்’னு மன்றாடியிருக்கார்.

பாபா பதில் எதுவும் சொல்லலை. ‘அய்யா! நீங்க என்னை ஏத்துக் கலைன்னா, இந்த மலை உச்சியிலிருந்து நான் குதிச்சிருவேன். உங்க வழிகாட்டுதல் இல்லாம நான் வாழ்ந்து பயனில்லை சுவாமி!’னு கதறி இருக்கார். ‘அப்படின்னா குதிச்சிடு. நீ இப்போ இருக்கிற நிலைமையில் உன்னை என்னால் ஏற்க முடியாது’னு பாபா சொன்னதும், அதே வேகத்தில் ஓடிப் போய் மலை உச்சியிலிருந்து டமால்னு குதிச்சுட்டாராம் அந்த ஆள்.

எல்லாரும் அதிர்ச்சியாகிப் பார்க்க, கீழே விழுந்து கிடக்கிற அந்த ஆளின் உடலை எடுத்துட்டு வரும்படி சொன்னாராம் பாபா. கீழே தரையில் சிதறிக் கிடந்த அவரோட உடம்பின் பாகங்களை சிஷ்யர்கள் போய் அள்ளிட்டு வந்தாங் களாம். குருநாதர் தன் கையை அந்த உடம்பின் மீது வெச்சதும், சடார்னு அந்த ஆளுக்கு உயிர் வந்து எழுந்து, பாபா காலில் விழுந்து கும்பிட்டாராம்.

‘நீ இப்போ என் சீடனாகத் தயாராக உள்ளாய்!’னு உயிர்ப்பிக்கப்பட்ட அந்த சீடரைப் பார்த்து பாபா சொன்னாராம். ‘நீ என் கடுமையான பரீட்சையில் தேறிட்டே... அழிவற்ற எங்கள் குழுவில் நீயும் இப்போ ஒருவன்!’னு அவரைத் தன்னுடன் சேர்த்துக்கிட்டாராம்னு ‘ஒரு யோகியின் சரிதம்’ புத்தகத்தில் படிச்சேன். ஒரு குருவுக்கு சிஷ்யன்னா அப்படி இருக்கணும். சரணாகதிதானே இருக்கிறதிலேயே பெரிய அன்பு!”

ஏதேதோ பேசியபடி நடக்கிற ரஜினி, மகிழ்ச்சியாக இருக்கிறார். பாபாவின் அருள் குகை தந்த பரவச அதிர்வுகளும், அந்த மலைக் காற்றில் கிடைத்த புத்துணர்ச்சியுமாக, புது நடை போடுகிறார்.

“ஆனா, நீங்க ரசிகர்களைச் சந்திக்கிறதே அபூர்வமா இருக்கே?” – சிரித்துக்கொண்டே ஹரி கேட்க,

“அதுதான் என்னோட ஒரே வருத்தம்! என்னை நேசிக்கிறவங்களைச் சந்திக்க முடியாமப் போறது ஒரு சோகம்தான்.

பத்திரிகையில் என் போட்டோ பார்த்தாலே சந்தோஷமாகிடறாங்க. நான் நடிச்சு ஒரு படம் வந்தா திருவிழா மாதிரி கொண்டாடறாங்க. என்னை பார்க்கணும்னு தவிக்கிறாங்க. ஆனால், அதுக்கு அவங்க நிறைய செலவழிக் கிறாங்க... பணம், நேரம், எனர்ஜினு நெறைய!

என் ரசிகர்களில் நிறைய பேர் அப்பாவி மனுஷங்க... கூலி வேலை பார்க்கிறவங்க. அவங்க உழைச்சா தான் அவங்க குடும்பத்துக்கு சாப்பாடுங்கிற மாதிரி கஷ்டப் படறவங்க. நான் வாய்ப்பு கிடைக்கிற போதெல்லாம், 'முதல்ல உங்க அம்மா – அப்பாவைப் பாருங்க, உங்க குடும்பத்தைக் கவனியுங்க'னு சொல்லிட்டே இருப்பேன். அதுதான் முதல் கடமை. 'நீ எங்கேயோ இருக்கே, நான் எங்கேயோ இருக்கேன். ஆனால், என் இதயத்தில் நீ மட்டும்தான் இருக்கே'னு சொல்லத் துடிப்பேன். பிறந்த நாள், இல்லே... ஏதாவது விழா அப்படினு என்னைப் பார்க்கிறதுக்காக அவங்க பைசா செலவழிக்கிறது எனக்குக் கஷ்டமா இருக்கு. எங்கேயோ நான் போகும்போது, கூட்டத்தில் திமிறிக்கிட்டு 'தலைவா வாழ்க'னு என் ரசிகன் இடிபடறதை, சட்டை கிழிஞ்சு நிக்கிறதை சத்தியமா என்னால தாங்க முடியலை. அதான் எனக்குத் தயக்கம்!

ஆனால், எனக்கு என் ரசிகன்தான் எல்லாம்! அட்லீஸ்ட், நன்றி சொல்லவாவது அவங்களை நான் சந்திக்கணும்!" யோசனையில் தாடியை வருடுகிறார் ரஜினி.



"அப்படி நீங்க வேற என்ன செய்யணும்னு நினைக்கறீங்க?" சற்றும் எதிர்பாராமல் ஹரி கேட்டுவிட, சிறு புன்னகையுடன் திரும்பிப் பார்க் கிறார் ரஜினி.

"ராமகிருஷ்ண பரமஹம்சரிடம், ஒரு அம்மா தன் பையனை அழைச் சிட்டு வந்தாங்க. 'சாமி, இவன் எப்பப் பார்த்தா லும் ஸ்வீட்டா சாப்பிடறான். அது உடம்புக்கு ரொம்பக் கெடுதினு சொன்னாலும் கேட்க மாட்டேங்கிறான். நீங்கதான் புத்தி சொல்லணும்'னு அந்தம்மா கேட்டுக்கிட்டாங்க. அவர் அந்தப் பையனை ஒரு மாசம் கழிச்சு அழைச்சிட்டு வரச் சொன்னார். 'ஏன்... இந்த சின்ன விஷயத்துக்குப் போய் ஒரு மாசம் கழிச்சு வரச் சொல்றார்?'னு யாருக்கும் புரியலை.

ஒரு மாசம் கழிச்சு, மறுபடி பையனை அழைச்சிட்டு வந்தாங்க அந்தம்மா. குட்டிப் பையனைத் தூக்கித் தன் மடியில் உட்கார

வெச்சுக்கிட்ட பரமஹம்சர், 'ஸ்வீட் சாப்பிடறது தப்பில்ல குழந்தை. ஆனா, நிறைய ஸ்வீட் சாப்பிட்டா அது உடம்புக்கு நல்லதில்லை. முதலில் பல்லு கெட்டுப் போகும், அப்புறம் வயிறு கெட்டுப் போகும். கொஞ்சங்கொஞ்சமா உடம்பே கெட்டுப்போயிடும். அம்மா சொல்றது உன் நல்லதுக்குத்தான் கண்ணா!'னு சொல்லி அனுப்பிச்சார்.

ஆசிரமத்தில் இருந்தவங்களுக்கு சந்தேகம், 'ஏன் குருவே... இதை நீங்க அன்னிக்கே அந்தப் பையனுக்கு சொல்லி இருக்கலாமே, ஏன் இவ்வளவு நாள் தள்ளி வரச் சொன்னீங்க?'னு கேட்டாங்களாம்.

'அது சரிதான். ஆனா, ஸ்வீட் எனக்கும் பிடிக்கும். அது கூடாதுனு அந்தப் பையனுக்குச் சொல்றதுக்கு முன்னால அதுக்கு என்னைத் தகுதியாக்கிக்கணும், இல்லையா? நான் ஒரு மாசம் அவகாசம் கேட்டது அந்தக் குட்டிப் பையனுக்காக இல்லை... எனக்கு!'னு சிரிச்சாராம் குரு.

அதுதான் சரி, நீ சொல்லப்போறது நல்ல விஷயமாகவே இருந்தாலும், அதைச் சொல்றதுக்கு முதலில் நீ உன்னைத் தகுதியாக்கிக்கணும்!

'வரம் கிடைக்கணும்னா மட்டுமில்லை, கொடுக்கணும்னாகூட தவமிருக்கணும்!'" – புன்னகை வழியும் உதடுகளுடன் அழுத்தமாகச் சொல்கிறார் ரஜினி.

அதில் ஆயிரமாயிரம் அர்த்தங்கள்!

Üனல் சென்னையிலிருந்து ஜெட் ஏர்வேஸ் ஏறினால், அரை மணி நேரத்தில் ச்சில்லென பெங்களூர்!

...சமீபத்தில் ஒரு நாள் சென்னையில் ராகவேந்திரா கல்யாண மண்டபத்தில் ரஜினியுடன் பேசிக்கொண்டு இருந்தோம். விகடனில் வெளிவரும் தன் ஆன்மிக பயணத் தொடருக்குக் கிடைத்திருக்கிற வரவேற்பு பற்றி சிலிர்ப்புடன் இருந்தார்.



“இமயமலைப் பயணம் பற்றி ஒரு ஆன்மிகத் தொடருக்கு இப்படி ஒரு வரவேற்புகிடைக்கும்னு நான் எதிர்பார்க்கலை. ரொம்ப நல்ல ரெஸ்பான்ஸ். வெரிகுட்... பிரமாதம்!” என்றார். பாபாஜியின் மகத்துவங்கள் பற்றி நிறைய எடுத்துச் சொன்னார். “நாம ரிலாக்ஸ்டா பேசலாம். நிறைய பேசலாம். பெங்களூர்ல மீட் பண்ணலாமா?” என்று அழைத்தார். பொதுவாக ரஜினி, ஓய்வுக்கும் தனிமைக்கும் மட்டுமே பெங்களூரைத் தேர்ந்தெடுப்பார். முதல் முறையாக அங்கே நமக்கு அழைப்பு!

ஜூன் 10... பெங்களூர் ரேஸ் கோர்ஸ் ஏரியா...

அமைச்சர்கள், உயர் அதிகாரிகள், தொழிலதிபர்கள் என பிரபலங்கள் வசிக்கிற வசீகரமான பகுதி. ஏரியாவை இப்போது கூடுதல் முக்கியத்துவத்துடன் கவனிக்கிறது கர்நாடக அரசாங்கம். காரணம், ரஜினி!

“ஹாய்!” கறுப்பு குர்தா, வெள்ளை பைஜாமாவில் துள்ளலாக வரவேற்கிற ரஜினியிடமிருந்து நமக்குள்ளும் பாய்கிறது உற்சாக மின்சாரம்!

“வாங்க, இங்கே இதான் நம்ம வீடு!” என உள்ளே அழைத்துச் செல்கிறார். “சும்மா சிம்பிளா, நீட் அண்ட் ஸ்வீட் ஹோம்!” என வீட்டைச் சுற்றிக் காட்டுகிறார். எளிமையான டபுள் பெட்ரூம் ஃப்ளாட். ஏராளமான சினிமா, மியூஸிக் ஆல்பங்கள். ஒரு ஷெல்ஃப் நிறைய புத்தகங்கள். சுவரில் பாபாஜி படங்கள். ஒரே ஒரு உதவியாளர் மட்டும் உடனிருக் கிறார். “இங்கே நான் மட்டும்தான். திடீர்னு நினைச்சா பறந்து வந்துடு வேன்”எனச்சிரிக்கிறார்ரஜினி.

தமிழ்நாட்டிலேயே பிரபலமான தலைமுடியைக் கோதும் விரல்கள். காற்றில் கபடி ஆடுகிற கைகளே பாதி பேசிவிடுகின்றன. புருவங்கள் வருடியபடி, ஒரு முறை இடம் வலம் நடக்கிற ரஜினி, "காபி ஆர் டீ..? என்ன சாப்பிட லாம்?" எனக் கேட்டு, "ஹலோவ்" என குரல் கொடுக்க, பெங்களூர் குளிருக்கு இதமான தேநீர் கோப்பைகள் இறக்குமதியா கின்றன.

"ரஜினி சார், நீங்க ரொம்ப அபூர்வமான பொருளா ஆகிட் டீங்க... அதுவும் மீடியா முன் ரஜினி வர்றது அபூர்வத்திலும் அபூர்வமா ஆகிடுச்சு.." என்றதுமே சிரிக்கிறார்.

"இது எப்படி ஆகிப் போச்சுன்னா... முதல்ல ஷூட்டிங் நடத்த வெளியே போகலாம்னா, 'இல்ல சார்... கூட்டம் தாக்குப் பிடிக்க முடியாது. ஸ்டுடியோவிலேயே செட் போட்டு எடுத்திர லாம்'னு சொல்ல ஆரம்பிச்சாங்க. அப்புறம் மைசூர், பெங்களூர்னு ஷூட்டிங் போக வேண்டியதாச்சு. இது கொஞ்சங்கொஞ்சமா வளர்ந்து, ஒரு கட்டத்தில் சும்மா நான் வெளியே வர்றதே முடியாதுன்னு ஆகிப்போச்சு. ஆனா, எப்பவும் நான் அதே ஆளுதான்!"

"ஏன் மௌனத்தையே உங்க ஆயுதமா தேர்ந்தெடுத்தீங்க?"

"நத்திங் ஸ்பெஷல்! முன்னெல்லாம் பிரஸ்னா ஆறேழு பேர் வருவாங்க... ஆனா, இப்போ பிரஸ் மீட்னாலே, அது ஏதோ பப்ளிக் மீட்டிங் மாதிரி நடக்குது. இருநூறு பேரெல்லாம் வர்றாங்களே. பொதுவா பிரஸ்ல நிறைய நண்பர்கள் உண்டு. ஆனா ஒரு சிலர்... ஒரு சிலர் மட்டும் கொஞ்சம் குறும்பு பண்ணிடறாங்க. காயப்படுத்திடறாங்க!

என் மேரேஜ்ல ஆரம்பிச்சு, டாட்டர் மேரேஜ் வரைக்கும் என்னென்னவெல்லாம் எழுதிட்டாங்க. அது தப்பில்லையா! பட்.. ஐ ரெஸ்பெக்ட் பிரஸ்!"

"நீங்க 'அபூர்வ ராகங்கள்' படத்தில் 'இதுதான் பைரவி வீடா?'னு சரேல்னு கதவைத் தள்ளிட்டு உள்ளே வருவீங்களே... அப்போ அந்த சினிமா பிரவே சத்தை ஒரு வாய்ப்புனு நினைச்சீங்களா, இல்லே, இதுதான் இனி வாழ்க்கைனு நம்பினீங்களா?"

"வாழ்க்கைனுதான்!

எவ்வளவு நாள் கனவு, போராட்டத்துக்கு அப்புறம் எனக்குக் கிடைச்ச வாய்ப்பு அது! சினிமா டிராமானு சான்ஸ் தேடி திரிஞ்சதால், கண்டக்டர் வேலையிலிருந்து என்னை டிஸ்மிஸ் பண்ணின நேரம் அது (பெரிதாகச் சிரிக்கிறார்)! ஹையோ... அது பெரிய கதை!

ஆனால், சினிமா எனக்கு இப்படி ஒரு வாழ்க்கை தரும்னு நான் நினைச்சுக் கூடப் பார்த்ததே இல்லை... ரொம்ப தூரம் கடந்து வந்துட்டேன்!"

"இதோ இப்போ கோடை விடுமுறை முடிஞ்சு ஸ்கூலெல்லாம்கூடத் திறந் தாச்சு. ஆனாலும், 'சந்திரமுகி' எல்லா ஷோவும் ஹவுஸ்ஃபுல் ஆகுது. இந்த வெற்றி உங்களுக்கு உணர்த்தியது என்ன?"- என்றதும், விறுவிறுவென தலை கோதியபடி, நாலைந்து விநாடிகள் தீர்க்கமாக யோசிக்கிற ரஜினி பிரமாதமாகச் சிரிக்கிறார்.

"டெஃபனிட்டா ஹிட்டாகும், நல்லா ஓடும்னு எனக்குத் தெரியும். ஆனா, இத்தனை பெரிய வெற்றி எதிர்பார்க்கலை. ரொம்ப சந்தோஷமா இருக்கு. தமிழ் மக்கள் என் மேல் வெச்சிருக்கிற அன்பு ஒரு துளிகூடக் குறையலைனு உணர்ந்தேன்."

"ஒரு பக்கம் கிளாமரான சினிமா லைஃப் ஸ்டைல்... இன்னொரு பக்கம் ஆன்மிகம். அதுவும் இமயமலைக்கெல்லாம் போய் தனிமையில் தன்னைத் தேடுகிற ஆன்மிகம்... ஒரே நேரத்தில் எப்படி இரண்டு வேறு தளங்களில் உங்களால் இயங்க முடியுது?"

“ம்ம்ம்... இதுதான் நிஜம். சினிமா தான் ரஜினி! ஆன்மிகம்... அது வந்து அப்பப்போ போயிட்டு வர்றது. கொஞ்சங்கொஞ்சமா மனசு அதில் லயிக்க ஆரம்பிச்சிருக்கு. ரெண்டும் கலந்ததுதான் நான்!

மனுஷனுக்கு முதல்ல ஆசைகள், கனவுகள்... ஒரு கற்பனை உலகத்தில் மிதப்பான். அப்புறம் தேவைகள்... அதுக்காக வொர்க்-அவுட் பண்ணுவான். அது கெடைச்சதும், தானாகவே ஒரு ஆடம்பரம் வந்துடும். நினைச்சதெல்லாம் செய்ய ஆரம்பிப்பான். அப்புறம் மலரும் நினைவுகள்! எங்கேயிருந்து வந்தோம்... எப்படி வளர்ந்தோம்னு நினைப்பு ஓடும். இப்படியே போறப்போ சட்டுனு மனசுக்குள் ஒரு ‘வேக்குவம்’ - வெறுமை... தனிமை வரும். நாம யாரு, என்ன பண்ணிட்டு இருக்கோம்னு இந்தப் பிறவிக்கு ஒரு அர்த்தம் தரத் தோணும்! எது செஞ்சாலும் சரி, நல்லது செய்யணும்னு ஒரு முடிவெடுத்து செயல்பட்டா நிச்சயம் அந்த வெற்றிடத்தை ஈடுகட்டிடலாம்!”

“ரஜினிக்கு அழகே சிம்ப்ளிசிட்டிதான். இதுதான் உங்க இயல்பா? இந்த லைஃப் ஸ்டைல் உங்களுக்கு அமைஞ்சது எப்படி?”

“தெரியலே... இப்படியே தான் இருக்கேன். பொதுவா எனக்குத் தேவைகள் பெரிசா இருந்ததில்லை. எனக்கு எப்பவுமே மன நிம்மதி மட்டும்தான் முக்கியம். மத்த எல்லாம் ரெண்டாம்பட்சம்தான். இப்படி இருக்கணும்... அப்படி இருக்கணும்னு நான் ஒரு நாளும் நினைச்சதில்லை. இதுக்குப் பேர் சிம்ப்ளிசிட்டின்னா, ஓகே! இதான் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு!”

“எல்லாருக்கும் அம்மா - அப்பா சொல்லிக் கொடுத்து இறை நம்பிக்கை வரும். ரஜினி சாருக்கு எப்படி வந்தது?”

“நல்ல கேள்வி! இறை நம்பிக்கை முதல்ல எப்போ எப்படி வந்துச்சுனு சொல்லத் தெரியலை. ஆனா, ஒரு ஏழெட்டு வயசிலேயே எனக்கு மனசுக்குள் மூணு உருவங்கள் வந்துபோகும்... ஒண்ணு ஹிமாலயாஸ். இன்னொண்ணு ஸ்வான் - அன்னப் பறவை! அப்புறம் கமலம்... லோட்டஸ்... தாமரை! இறைவன் மேல ஆழமா எனக்கு நம்பிக்கை வந்ததுக்கு நிறையச் சம்பவங்கள் இருக்கு. அது ரொம்பப் பெரிய ஏரியா!

அப்புறம் என் பிரேயர்...

பொதுவா கடவுள் முன்னால் ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு விதமா நிப்பாங்க. சில பேரு, ‘சாமி எனக்கு அது வேணும்... இது வேணும்’னு நிறைய கோரிக்கைகளை வெப்பாங்க. சிலருக்கு கோரிக்கையே இருக்காது. டோட்டலா

சரண்டர் ஆகிடுவாங்க. இன்னும் சிலர், கடவுளுக்கு நன்றி சொல்லப் போவாங்க... 'தாங்க்ஸ் கிவிங்' மட்டுமே அவங்க பிரார்த்தனையா இருக்கும்!

என் பிரேயர் ஒவ்வொரு கட்டத்திலேயும் ஒவ்வொரு விதமா இருந்திருக்கு. இப்ப என் பிரேயர் எல்லாம் 'இறைவா! உன் நினைவோட என்னை வெச்சிரு எப்போதும், அது போதும்!' அவ்வளவுதான்!"

"நீங்க திட்டம் போட்டு, கணக்குப் போட்டுத்தான் எப்பவும் செயல்படுவீங்களா... இல்லை, உங்க இன்டியூஷன் உங்களை வழி நடத்துதா?"

"நிச்சயமா உள்ளுணர்வு தான்! எப்பவுமே நமக்கு 'ஆண்டவன் சொல்றான், நாம செய்றோம்'தான். இந்தக் கணக்கு போட்டு காய் நகர்த்தற சமாசாரமே தெரியாது. மனசு என்ன சொல்லுதோ அப்படிப் போயிட்டே இருப்பேன்!"

"பர்சனலா ஒரு கேள்வி... ரஜினி சாருக்கு ரெண்டும் பெண் பிள்ளைகள். எப்போவாவது 'அடடா, நமக்கு ஒரு பையன் பிறந்திருந்தால் எப்படி இருந்திருக்கும்?'னு யோசிச்சதுண்டா?"

"(துளியும் தயங்காமல்) நெவர்! ஆண் பிள்ளை இல்லியேனு யோசிச்சதே இல்லை. ரெண்டும் பெண் குழந்தைகள்னு சந்தோஷப்பட்ட நேரங்களே அதிகம். ஐஸ்வர்யா - சௌந்தர்யானு நான் ரெண்டு பெண்களுக்குத் தகப்பன். காலையில் எந்திரிச்சு வரும்போது, வீட்டில் ரெண்டு மகள்களும் கலகலனு நடமாடுறதைப் பார்த்தாலே ஒரு தனி சந்தோஷம் வரும். ஆமா, ஒரே ஒரு பொண்ணு இருந்தாக்கூட போதும்... அந்த வீட்டுக்கே உயிர் வந்துடும். ஏன்னா... பெண்தான் சக்தி... தாய்!

ஒரு வீட்ல ஆம்பள கெட்டுப் போயிட்டால், அந்தக் குடும்பத்தை பொண்ணு எப்படியாவது பொழைக்க வெச்சிடுவா. ஆனா, ஒரு பொண்ணு கெட்டுப் போயிட்டா, அந்தக் குடும்பமே அழிஞ்சுபோயிடும்னு சொல் வாங்க! தட்ஸ் வெரி ட்ரூ! பெண் அப்படியொரு மகா சக்தி!"

"வாழ்க்கையை திரும்பிப் பார்த்தால் ரொம்ப கரடுமுரடான பாதையில் பயணம் வந்திருக்கீங்க. இந்த உயரத்துக்கு வர எவ்வளவோ விலை கொடுத்திருப்பீங்க... எங்கேயோ எதிர்பார்க்காத

இடத்தில் காயப்பட்டு இருப்பீங்க... அவமானங்களைக்கூட சந்திக்க வேண்டி இருந்திருக்கும்... சில சமயம் எதிர்பார்க்காத தோல்விகள்... ஆனால், இது அத்தனையையும் தாண்டி நீங்க உங்களைக் காப்பாத்திக்கிட்டது எப்படி?"

"டியூட்டி! செய்ற வேலையில் நமக்கு இருக்குற கன்விக்ஷன்தான் எப்பவுமே நம்மைக் காப்பாத்தும்!

ஒரு சகோதரனா, ஒரு நண்பனா, நடிகனா, மகனா, அப்பனா, குடும்பத் தலைவனா நாம என்ன ரோல் எடுக்கிறோமோ, அதைக் கவனமா முழு மனசோட செய்துடணும்.

வாழ்க்கை ஒலிம்பிக்ஸ் மாதிரி... கிரவுண்ட்ல போய் நின்னுட்டோம்னா, எடுத்துக்கிட்ட வேலையைச் சரியா செஞ்சு, சரியா ஓடிப் போய் எல்லையைத் தொட்டுறணும். 'கடமையைச் செய்!' தான் என் பாலிசி! நிச்சயம் பலன் தானே பின்னால் வரும்.

ஏன், நான் சினிமா பண்றப்பகூட அப்படித் தான். சமயத்தில் அம்பது அறுபது சதவீதம் படம் நடக்கும்போதே, அது ஓடுமா ஓடாதானு தெளிவாத் தெரிஞ் சுடும். ரெடியான வரையில் அந்தப் படம் நமக்கு புடிக்கலைன்னே வெச்சுக்குங்க... அதுக்காக அதை விட்டுட்டு விலகிட மாட்டேன். என் ஆர்வத்தையும் குறைச்சுக்க மாட்டேன். அது கமிட்மென்ட். அங்கே நாலு பேர் நம்மை நம்பி இருப்பாங்க... அதனால அந்த வேலையை சின்ஸியரா முடிச்சுக் கொடுத்துருவேன். அப்படித்தான் இருந்திருக்கேன்... இருப்பேன். அந்த உறுதி மனசில் இருந்ததுன்னா ஒவ்வொண்ணா ஜெயிச்சிடலாம்!"

"முடிவுகள் எடுப்பதில் பொதுவா ரஜினிக்கு ஒரு தயக்கம் இருக்கிற மாதிரி தெரியுதே. உதாரணத்துக்கு, ஒரு படம் பண்றதுக்கே மூணு வருஷ இடைவெளி விட ஆரம்பிச்சுட்டீங்க. என்ன கதைனு முடிவெடுக்க அவ்வளவு டைம் எடுத்துக்கறீங்க... ஆனா, பூஜை போட்டுட்டா அடுத்த மூணாவது மாசம் படம் தியேட்டருக்கு வந்துடுது. ஒரு முடிவு எடுக்கிறதுக்கு ஏன் இந்த பெரிய இடைவெளி... முடிவெடுத்த பின் எப்படி இப்படியொரு வேகம்?"

"அதுதான் சொன்னேனே... எடுத்துக்கற டியூட்டில நாம சின்ஸியரா இருக்கணும்னு! ஒரு விஷயத்தில் இறங்குறதுக்கு முன்னாடி நிறைய யோசிப்பேன். அது சரிதானா, சரியா வருமா, சரியாப் பண்ணணும்னா என்ன செய்யணும்னு யோசிச்சுட்டே இருப்பேன். எதிலும் இறங்கறதுக்கு முன்னால் அதுக்கு நான் என்னைத் தகுதியாக்கிக்கணும். இதோ'இன்னிக்கு நாம சந்திக்கலாம்'னு பேசி வெச்சோம். அப்போதிருந்து இதுவும் மனசுக்குள் ஓடிட்டே இருந்தது. சொன்ன நேரத்துக்கு ஒரு நிமிஷம் தள்ளி வந்தீங்கன்னாக்கூட, அது ஒரு நாள் மாதிரி இருக்கும் எனக்கு.

இப்போ சினிமா விஷயம்.. நாம என்ன பண்ணாலும் அது டி.ஃபரென்ட்டா இருக்கும்னு மக்கள்ட்ட ஒரு எதிர்பார்ப்பு வளர்ந்துருச்சு. அதனால்தான் டைம் எடுத்துக்கிறேன். இதோ 'சந்திரமுகி' பிச்சுக்கிச்சு... அப்படி ஒரு சாலிட் ரெஸ்பான்ஸ். குட்... சந்தோஷம். ஆனா, உடனே அடுத்த படம் என்னன்னு உட்கார்ந்துட மாட்டேன். அட்லீஸ்ட் ஆறு மாசத்துக்கு அந்த ஸ்விட்ச்சை ஆஃப் பண்ணிடுவேன். சுத்தமா அதிலேயிருந்து விலகிடுவேன். மனசை ஃப்ரீயா வெச்சுக்குவேன். அப்போதான் அடுத்து ஒரு வேலைக்கு படத்துக்கு உட்காரும்போது முழு சக்தியோட இறங்க முடியும்.

அடுத்த மாசம் ஒரு விழாவுக்கு வர்றேன்னு ஒப்புக்கிட்டா, இப்பவே ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது அந்த நிகழ்ச்சி சம்பந்தமா நினைவுபடுத்திக்குவேன். அது அப்படியே மனசுக்குள் ஒரு பக்கம் ஓடிட்டே இருக்கும். அங்கே யாரைச் சந்திக்கணும், என்ன பேசணும்னு யோசனை துளைச்சுக்கிட்டே இருக்கும். அதுவே ஒரு பெரிய பொறுப்பா மாறிடும். அதனாலேயே பெரும்பாலும் எந்த நிகழ்ச்சிகள்லயும் கலந்துக்கறது இல்லை.

சிலர் சொல்வாங்க... 'நிகழ்ச்சின்னா அப்படியே நேரா போய் கலந்துக்குவேன்'னு! என்னால அப்படியெல்லாம் முடியாதுங்க. நான் எந்தச் சின்ன நிகழ்ச்சியா இருந்தாலும், என்னைத் தயார் பண்ணிக்கிட்டுதான் போவேன். மத்தபடி மனசுக்குள் ஒரு கமிட்மென்ட் வந்துட்டா போதும், தடதடனு வேலையை முடிச்சுக் கொடுத்துடுவேன். அதான் என் கேரக்டர்!"

"கோபதாபமான, கொந்தளிப் பான ஒரு அதிரடி ரஜினியை ஆரம்ப காலம் முதல் தமிழ்நாட் டுக்கு தெரியும். ஆனால், போகப் போக ரொம்பப் பக்குவப்பட்ட மனிதரா தெரியறீங்க..."

"அடி மேல அடி விழுந்தா அம்மியும் நகரும்னு சொல்வாங்கள்ல... அப்படித்தான் வந்துச்சு... ஹாஹ் ஹாஹ் ஹா!"

உரக்கச் சிரிக்கிற ரஜினி, அதன் பிறகு சொல்கிற விளக்கத்தில் அவரது வெற்றியின் ரகசியம் ஒளிந்திருக்கிறது!

ஒரு கனிவான வேண்டுகோள்!

ð£பாஜி குகை தரிசனம் செல்ல விரும்புபவர்கள், துவார காட்டில் 'யோகுடா சத்சங்'கின் அனுமதி பெற்ற பிறகே, பெரிய குகைக்குச் செல்ல வேண்டும்.



சிறிய குகைக்குள் நுழைய முயற்சிக்காதீர்கள். காலங்காலமாக ரிஷிகள் தவமிருக்கும் குகை அது. மான் தோல், கமண்டலம் எனப் புனிதப் பொருட்கள் இருக்கும் அந்த அருள் குகையில், பாபாஜியின் ஆசிர்வாதமும் தீட்சையும் பெற்றவர்கள் மட்டுமே பிரவேசிக்க முடியும்!

ñழைப் பேச்சு கேட்கும் மதிய நேரம்... ரஜினியின் பெங்களூர் இல்லத்தில் உரையாடல் தொடர்கிறது...

ரஜினியின் அழகே அவரது ரசனைதான்! சின்னச் சின்ன விஷயங்களுக்குக்கூட ஆச்சர்யம் காட்டுகிறார். ஏராளமான புத்தகங்கள் வாசிக்கிறார். நிறைய இசை கேட்கிறார். ரகளையான வாழ்க்கை கொட்டிக் கொடுத்த அனுபவங்களால் நிறையவே பக்குவப்பட்டிருக்கிறார் என்பது அவர் பேச்சிலேயே புரிகிறது. சினிமா காட்டும் ஸ்டைல் ஹீரோவுக்கும், எதிரில் அமர்ந்திருக்கிற நிஜ ரஜினிக்கும் ஏகப்பட்ட வித்தியாசங்கள்!

“கோபதாபமான, கொந்தளிப்பான ஒரு அதிரடி ரஜினியை ஆரம்ப காலம் முதல் தமிழ்நாட்டுக்குத் தெரியும். ஆனால், போகப் போக ரொம்பப் பக்குவப்பட்ட மனிதராத் தெரியறீங்க...”

“அடி மேல அடி விழுந்தா அம்மியும் நகரும்னு சொல்வாங்கள்ல... அப்படித்தான் வந்துச்சு... ஹாஹ் ஹாஹ் ஹா!” – உரக்கச் சிரிக்கிற ரஜினி, தன் கை மடிப்பைச் சரி செய்தபடி சொல்கிறார்...

“காலம்ங்கிற ஒரு சிற்பி இருக்கான்ல... அவன் சும்மா டிங்கு டிங்குனு நம்மளச் செதுக்கிருவான். அம்பத்தஞ்சு வருஷ வாழ்க்கை கத்துக் குடுத்த அனுபவத்தில் எல்லாம் பாத்தாச்சு. நல்லது... கெட்டது... எல்லாம் பாத்தாச்சு!

சரசர சரசரனு தூக்கிட்டு வந்து இங்க உக்கார வெச்ச வாழ்க்கை... இந்த சினிமா, பேர், பணம், புகழ் எல்லாத்தையும் தூக்கித் தூர வெச்சிட்டு, ஒரு நிமிஷம் தனியா உக்காந்து பாத்தா, சம்பாதிச்ச ஒரே விஷயம் - இந்தத் தமிழ் மக்களின் அன்பும், நல்ல நல்ல மனிதர்களின் நட்பும்தான். அதுதான் கிரேட் கி◌ஃப்ட்... சொத்து!

அதனால மனசு செட்டாகிருச்சு... எல்லாத்துக்கும் பழகிருச்சு!தெரிஞ்சோ, தெரியாமலோ யாராச்சும் துன்பம் குடுத்தாலும் சரி... அவங்களுக்கும் சேர்த்து சந்தோஷம் தர ஆரம்பிச்சேன். ‘டூ யுவர் டியூட்டி. கிவ் தி பெஸ்ட்!’ அந்த வகையில் ஐ எம் ஹேப்பி!”

“நட்புக்கு, நண்பர்களுக்கு ரொம்ப முக்கியத்துவம் கொடுக்கிற மனிதர் ரஜினி. ஒரு நல்ல நண்பனைத் தேர்ந்தெடுப்பது எப்படி... கொஞ்சம் சொல்லுங்களேன்?”

“◌ஃப்ரெண்ட்ஷிப் இஸ் லை◌ஃப்! அதுக்குத் தனியா ஒரு கிராமர் கிடையாது. ஒரு நல்ல நண்பன் அமையறதே வரம். ஏன்னா, யார்கிட்டேயும் பழகிப் பழகித்தான் புரிஞ்சுக்க முடியும். கஷ்டத்தில்தான் நமக்கு நண்பன் யார், பகைவன் யார்னு தெரியும். நம்மோட பழகறவன் எதுக்காகப் பழகறான்... அவன்ஆப்பர் சூனிஸ்ட்டா, செல்◌ஃபிஷ்ஷா..? அவன் நிஜமாவே நண்பனா, இல்லே பகைவனா அப்படிங்கிறதெல்லாம் காலப்போக்கில் தான் தெரியும்.

நண்பர்கள் ஏன் முக்கியம்னா, நாம நண்பர்களோடதான் வளர்றோம். சொல்லப்போனா, நல்ல நண்பர்களால் தான் வளர்றோம்! கெட்ட பழக்கங் களோ, இல்லே நல்ல பழக்கங்களோ... எது வர்றதும் நட்பினால்தான்! அதனால ஒருத்தன் நல்லவனா இருக்கிறதுக்கும் கெட்டவனா மாறுறதுக்குமே நட்புதான் காரணம். அதனால்தான் யார்கிட்ட பழகும்போதும், அவங்களை நண்பனா ஏத்துக்கிறதுக்கு முன்னால யோசிக்கணும். ஏத்துக்கிட்டா, அந்த நட்பைக் கடைசி வரைக்கும் காப்பாத்தணும்! நான் அப்படித்தான்... ஏ டூ இஸட் நண்பர்கள்தான் எனக்கு!" —செல்போன் சிணுங்க, எடுத்துப் பார்க்கிற ரஜினி, பதில் சொல்லி முடித்த இடத்தை மனசுக்குள் ஓட்டிப் பார்த்து, "நண்பன்!" எனச் சிரிக்கிறார்.

"தமிழ்நாட்டுல எல்லாருக்கும் தெரிஞ்ச முகம் நீங்க... அதனாலயே உங்களுக்கு பிரைவஸி கிடையாது. நினைச்ச மாதிரி வெளியே நடமாட முடியாது. இது உங்களுக்குக் கஷ்டமா இருக்குமா?"

"கஷ்டம்தான். அதுவும் என்னை மாதிரி ஒருத்தனுக்கு ரொம்பக் கஷ்டம். 'இந்த உலகத்தில் எதுவும் ஃப்ரீ கிடையாது கண்ணா. ஒவ்வொண்ணுக்கும் ஒரு விலை இருக்கு!' அதைக் குடுத்தே ஆகணும். எனக்கு பயம், பாதுகாப்பு பற்றியெல் லாம் கவலை இல்லை. இது அன்புக்குக் கொடுக்கிற விலை!

அதனால இதுவும் பழகிருச்சு. இதோ, இப்போ சமீபத்துல ஒரு நாள்... சும்மா தோணுச்சு... என் ஃப்ரெண்டு ஒருத்தரைப் பார்க்க சர்ப்ரைஸா அவர் வீட்டுக்குப் போயிட்டேன். போன வேகத்துல கௌம்பி கார்ல ஏறும்போது பார்த்தா, பக்கத்து வீட்டுக்காரங்க, யு.எஸ—ல இருந்து சம்மர் ஹாலிடேவுக்கு வந்தவங்களாம். குழந்தை, அவங்க அம்மா, அப்பா எல்லாரும் திக்குனு என்னை ஆச்சர்யமா பார்க்கிறாங்க. நின்னா கூட்டம் கூடிருமேனு, சிரிச்சுட்டே நான் காரை எடுத்து கியர் போட்டுக் கிளம்பினப்போ... அந்த லேடி வீட்டுக்குள்ள போய் ஒரு கேமரா வோட ஓடி வர்றதைப் பார்த்தேன். ஆனா, அதுக்குள்ள கார் கிளம்பிடுச்சு.

நண்பர் ஹரியுடன்...

ரெண்டு தெரு தாண்டி போனப் புறம், 'அடடா, ஆசை ஆசையா ஓடி வந்தவங்க அப்செட் ஆகியிருப்பாங்களே?'னு தோணுச்சு. 'திருப்பு வண்டியை!'னு ஒரு யூ டர்ன் போட்டு, மறுபடியும் அங்கே போய், அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சிட்டு, ஒரு போட்டோ எடுத்த பிறகு தான் வந்தேன். அவங் களுக்குச் சந்தோஷம். அந்த குட்டிக் குழந்தை க்யூட்டா அப்படி ஒரு சிரிப்பு சிரிக்குது. குட்... அது நல்ல விஷயம்!

ஆனா, எங்கியோ ஒரு ஃப்ரெண்டோட இறப் புக்குப் போய் நிக்கும் போதும் அங்கே என்னை 'ரஜினி, ரஜினி'னு சுத்திச் சுத்தி வந்து பாத்தாங்கன்னா, தட்ஸ் ரியலி டிஸ்டர்பிங்!" என்கிறார் தலை உலுக்கி.

"சரி, வெளியிலயே போறதில்லை. அப்படியிருக்கும்போது, இன்னிக்கு வெளியில் என்ன நடக்குது, எது ஃபேஷன், மக்கள் ரசனை என்ன, அரசியல் நிலவரம் என்ன... இதெல் லாம் எப்படித் தெரிஞ்சுக்குவீங்க?"

"அதுக்குத்தான் மீடியா இருக்கு... ஃபிரெண்ட்ஸ் இருக்காங்க. அப்புறம், பிரைவஸி இல்லைனு சொல்லி, நான் ஒரே இடத்துல முடங்கிடற ஆள் கிடையாது. நிறையவே டிராவல் பண்றேனே!"

“சினிமாவில் உங்களுக்கும் இளையராஜாவுக்கும் ஆன்மிகம்னு இன்னொரு பரிமாணம் இருக்கு. இருவரும் உங்களுக்குள் அதுபற்றிப் பகிர்ந்துக்குவீங்களா?”

“ராஜா சாரை நான் கூப்பிடறதே ‘சாமி’ன்னுதான். இதோ, இப்போ பெங்களூர் கிளம்பி வர்றதுக்கு முன்னாடி ராஜாவைப் பார்க்க அவர் வீட்டுக்குப் போயிருந்தேன். திருவாசகத்தைப் போற்றிப் பாடி ஒரு மியூஸிக் ஆல்பம் பண்ணி முடிச்சிருக்காரில்லையா... அந்த மியூஸிக் கேட்டேன்! அப்பிடியே மனசு மிதக்குது. அது சும்மா ஒரு வேலைனு நினைச்சுப் பண்ணியிருந்தா வந்திருக்காது. அதுல பிரமாதமான ஜீவன் இருக்கு... ஒரு தபஸ் மாதிரிதான் அதை செஞ்சிருக்காரு ராஜா!

அதுக்கான விழாவுக்கு நான் வரணும்னு கூப்பிட்டு இருந்தாங்க. ஆனா, விழா நேரத்துல நான் ஊரில் இருக்க மாட்டேன். அதான்,அவர் வீட்டுக்கு சந்திக்கப் போயிருந்தேன். எனக்கும் ராஜாவுக்கும் ஒரு நெருக்கம் உண்டு. அவர்தான் ரமண ரிஷியின் போட்டோ, புத்தகமெல்லாம் எனக்கு முதல்ல தந்தவர். அதுக்குப் பின்னாடிதான் நான் திருவண்ணாமலை போக ஆரம்பிச்சதெல்லாம்! சினிமாவைத் தாண்டி எங்களுக்குள்ள ஆழமான நட்பு எப்பவுமே இருக்கு!”

“இமயமலைப் பயணங்கள்தான் உங்க வாழ்க்கையை மாற்றி அமைச்ச முக்கியமான விஷயமா?”

“யெஸ்! என் வாழ்க்கையில் கடந்த 12 வருஷங்கள்தான் மிக முக்கியமான காலகட்டம். சொல்லப்போனா, இந்த 12 வருஷங்களாத்தான் நான் ஹிமாலயாஸ் போக ஆரம்பிச்சதும்!

அங்கே என்ன ஸ்பெஷல்னா, இயற்கை... பிரமாண்டமா விஸ்வரூபம் எடுத்து நிக்கிறப்போ அது முன்னால நாம குழந்தை ஆகிடுவோம். பொதுவா குழந்தைங்க மனசுல எதுவுமே இருக்காதுனு சொல்வாங்க. ‘பாஸ்ட், ஃபியூச்சர்’னு எந்தக் கவலையும் குழப்பமும் இருக்காது. அது எப்பவுமே க்ளீன் சிலேட்! வெட்கம், அகங்காரம், போட்டி, பொறாமைனு எதுவுமே அவங்க மனசுல இருக்காது. அப்படியொரு லேசான மனசு இமயமலைக்குப் போகும்போது நமக்கும் வாய்க்கும்!”

“எப்பவும் துறுதுறுனு இருக்குற நீங்க, அங்கே எப்படி பல மணி நேரம் ஒரே இடத்தில் அமைதியா இருக்கீங்க?”

“அங்கே இருக்கறது நேச்சுரல் வைப்ரேஷன், இங்க இருக்கறது ஹியூமன் வைப்ரேஷன். ரெண்டுக்கும் நிச்சயம் வித்தியாசம் இருக்கத்தான் செய்யும்.

பாபாஜி குகைக்குப் போறப்போ அந்த அமைதி தானா வந்துடும். யாரா இருந்தாலும் அப்படியொரு அமைதிக்கு ஆளாகிடுவாங்க. அங்கே இருக்கிற செடி, மண்ணு, கல்லுனு ஒவ்வொண் ணும் ஒவ்வொரு செய்தி சொல்லும். சும்மா கரையோரமா உட்கார்ந்து கங்கா நதியைப் பார்த்துட்டிருந்தாலே போதும், நீங்க ஆசிர்வதிக்கப்படுவீங்க!”

“யோகாசனம், தியானம் பழகின பிறகு உங்களுக்குள் என்னென்ன மாற்றங்கள் நிகழ்ந்தன... அதுபத்திக் கொஞ்சம் சொல்லுங்க?”

“நிறைய!

அது வந்து... நேரடியா எக்ஸ்பீரியன்ஸ் பண்ணணும். அப்போதான் அந்த சக்தி... பவர் புரியும். சும்மா யோகா, தியானம்னு பேச ஆரம்பிச்சா, ‘அட போப்பா!’ன்னுட்டுப் போயிடுவாங்க. யோகா உடம்புக்கு... தியானம் மனசுக்கு!

எல்லோருக்கும் டென்ஷன், பிரச்னை, அவஸ்தை, தலைவலி இருக்கு. காலைல வெளியே கிளம்பறப்போ, ‘இன்னிக்குப் புதுசா பிறந்தோம்டா!’னு நினைச்சுக்கிட்டு கிளம்புங்க. ஈவினிங் வீட்டுக்கு வந்ததும் அப்பிடியே உட்காருங்க... சும்மா ஒரு அஞ்சு நிமிஷம் கண்ணு மூடி உட்காருங்க. இன்னிக்குக் காலையிலிருந்து சாயந்திரம் வீடு திரும்பற வரை என்னவெல்லாம் நடந்துதுனு நெனச்சுப் பாருங்க.

ஜஸ்ட் திங் அபௌட் இட்! நீங்க யாரையோ காயப்படுத்தி இருக்கலாம். உங்களை யாரோ சந்தோஷப்படுத்தி இருக்கலாம். ஒரு வேலை நல்லபடியா முடிஞ்சிருக்கும். செய்ய நினைச்ச எதையோ மறந்துபோயிருப்பீங்க. அது எல்லாத்தையும் மனசுக்குள் ஒரு ரீப்ளே பண்ணிப் பாருங்க.

முதல் நாள் இது நாலஞ்சு நிமிஷத்தில் முடிஞ்சுபோயிடும். அப்புறம், அதுவே இன்னும் டைம் கூடும். எங்கியோ ஒரு மொமண்ட்ல தடக்குனு நீங்க உங்களை மறந்து ஒரு சூன்யத்துக்குள் போய் வருவீங்க. அந்த அனுபவம் தனி எனர்ஜி தரும். கிரியா யோகாவை முறையா கத்துத் தர நல்ல மாஸ்டர்ஸ் இருக்காங்க. யோகுடா சத்சங்கில் போய்ப் பாருங்க. கத்துக்கிட்டா இன்னும் நல்லா இருப்பீங்க... இது என் எக்ஸ்பீரியன்ஸ்!”

“வாழ்க்கை உங்களுக்குக் கத்துக் கொடுத்த விஷயம் என்ன?”

“வாழ்க்கை என்பது ஒரு துன்பம். யெஸ்... வாழ்க்கையே துன்பம்தான்! அதில் இன்பம் அப்பப்போ வந்துட்டுப் போகும். இது... இதைப் புரிஞ்சுக்கிட்டா போதும்... எதையும் ஜஸ்ட் லைக் தட்... தாண்டிப் போயிடலாம்!”

“சினிமாவைத் தவிர, கொஞ்ச காலம் வெளியேயும் நடமாட ஆரம்பிச்சதில் நீங்க புரிஞ்சுக்கிட்ட விஷயம் என்ன?”

“அட, எல்லோருமே மனுஷங்கதானே! நம்மைச் சுத்தி ஏமாத்துறவன் நிறைய இருக்கான். அவங்ககிட்டே இருந்து நம்மளைக் காப்பாத்திக்கிட்டாலே போதும். வாழ்க்கையில ஜெயிச்சிட லாம்!” –கடகடவென ரசனையுடன் சிரிக்கிறார் ரஜினி.

“இதோ, இப்போ ‘சந்திரமுகி’ சக்சஸுக்கு அப்புறம் மறுபடியும் ரஜினி ரசிகர்கள் கம்பீரமா நெஞ்சு நிமிர்த்தி நடமாடறாங்க. ரசிகர்களுக்கு என்ன சொல்ல விரும்பறீங்க?”

“நான் அமிதாப்ஜிக்கு ஃபேன்! ரசிகன்னா... சும்மா இவ்ளோ, அவ்ளோனு இல்லை. அப்படி ஒரு ரசிகன் நான்... இப்பவும்!

எப்பவோ அவரிடம் இதுமாதிரி ஒரு கேள்வி கேட்டப்போ, அமிதாப்ஜி சொன்ன ஒரே பதில்... ‘ஃபாலோ தி சன்! சூரியனுக்கு முன்னாடி நீ எழுந்திருச்சுடு’னு எங்க அப்பா சொன்னார். வாழ்க்கைல நான் இந்த இடத்தைத் தொட்டதுக்கான ஒரே காரணம் அதுதான். அதைச் செய்ய ஆரம்பிச்ச பிறகு, எனக்கு எல்லாமே நல்லவிதமா நடக்க ஆரம்பிச்சுது!’னு சொன்னாங்க. அது நூத்துக்கு நூறு கரெக்ட்!

இப்பிடி நிறைய சொல்றதுக்கு இருக்கு. முக்கியமான ஒரு விஷயம் சொல்லிடறேன்... ஒண்ணே ஒண்ணு... அதுவும் நான் ஏற்கெனவே சொன்னது தான்... குடும்பத்தைக் கவனிங்க. தாய், தகப்பனை, சகோதரன், சகோதரியை, குழந்தைகளைப் பாருங்க... உங்க குடும்பத்தைக் காப்பாத்துங்க.

அதை ஒழுங்கா செய்ய ஆரம்பிச்சுட் டாலே... எந்த மனுஷனுக்கும் தானா ஒரு பவர் வந்துடும். அந்தச் சக்தியை வெச்சு இன்னும் நாலு பேருக்கு நல்லது செய்யலாம். அப்படி வர்றப்போ, நானும் ஒரு சக்தியா இருப்பேன்!”

“தன் படங்கள் மூலமா தமிழ்நாட்டுக்கு ரஜினி தந்தது ஏராளமான ‘சந்தோஷம்’. ரஜினிக்குத் தமிழ் மக்கள் திருப்பிக் கொடுத்தது அளவில்லாத அன்பு! யோசிச்சுப் பார்த்தால், இது உணர்வுரீதியான பந்தம். இதைத் தாண்டி உங்களை நேசிக்கிற தமிழ் மக்களின் நலனுக்கு ஆக்கப்பூர்வமா ஏதாவது செய்யணும்னு எப்போவாவது யோசிச்சது உண்டா? அப்படி ஏதாவது ஒரு திட்டம் இப்போ உங்க மனசில் இருக்கா?”

ஓரிரு விநாடிகள் தீர்க்கமான மௌனம் காக்கிற ரஜினி, நம் கண்கள் பார்த்து அழுத்தமாகச் சொல்கிறார்...

“இருக்கு!”

ஹவ்வீஸ் இட்!

தொகுப்பு: ரா.கண்ணன், விகேஷ்
படங்கள்: கே.ராஜசேகரன்